Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, SEPTEMBER 6 2024

வெள்ளிக்கிழமை செப்டெம்பர் 06, 2024 | ஒளி: 10 கதிர்: 045 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE



# நாட்டை பலியாக்க வேண்டாம்

தனிமையில் இருந்து விடுபட்டு நட்புறவின் மூலம் சர்வதேசத்தை சமாளிக்கும் நாடாக மாறிவிட்ட நிலையில், தீவிரவாத சோதனைகளுக்கு நாட்டை பலியாக்க வேண்டாம். நாங்கள் இல்லாமல் ஆட்சியை நடத்துவது சாத்தியமில்லை. அச்சுறுத்தல்கள் மற்றும் சிரமங்களை எதிர்கொண்ட எமது எம்.பிக்கள் தன்னம்பிக்கையுடன் உலகின் நம்பிக்கையை வென்றுள்ளனர் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

"ஒரு வெற்றி நாட்டிற்கு தைரியத்தின் சேர்க்கை" என்ற தொனிப்பொருளில் இலங்கை அரசியலில் புதிய திசையை உருவாக்கும் நோக்கில், நாட்டின் பரந்துபட்ட அரசியல் கூட்டணியான பொதுஜன ஐக்கிய சுதந்திர முன்னணி பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் வோட்டர்ஸ் எட்ஜி ஹோட்டலில், வியாழக்கிழமை (05) உதயமானது.

தொடர்ச்சி P12



# முஸம்மில் இராஜினாமா

ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம் முஸம்மில் ஆளுநர் பதவியை இராஜினாமா செய்துள்ளார். அவர், தனது இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

அவர் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவிற்கு தனது ஆதரவை வழங்கவுள்ளார்.



# முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா நடுநிலை

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எந்தவொரு வேட்பாளருக்கும் ஆதரவு வழங்காமல் நடுநிலை வகிக்கத் தீர்மானித்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அறிவித்துள்ளார்.

இம்முறை தாம் பல்வேறு வேட்பாளர்களுக்கு ஆதரவு வழங்கவுள்ளதாக உண்மைக்குப் புறம்பான தகவல்கள் வெளிவந்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P12

### தேர்தல் தொடர்பில்

# 173 முறைப்பாடுகள்; 22 பேர் கைது

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரை பொலிஸாருக்கு 173 முறைப்பாடுகள் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில், 119 முறைப்பாடுகள் தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பானவை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P12

# வீடுகளுக்குள் புகுந்து தாக்கிய வன்முறை கும்பல்

புகஜிந்தன்



யாழ். வட்டுக்கோட்டை, கணவத்தை பகுதியில் புதன்கிழமை(04) இரவு வீடுக்குள் புகுந்த வன்முறை கும்பல் ஒன்று தாக்குதல் நடத்தியுள்ளது. இதன்போது சிறுவர்கள், பெண்ணொருவர் உட்பட ஐவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P12

# உண்மையான வில்லன்களை தமிழர்களுக்கு தெரியும்



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் கூட்டிணைந்தே மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படுவதற்கு முட்டுக்கட்டை போட்டதாகக் குற்றம்சாட்டிய பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ, சஜித்தை ஆதரிக்கும் தீர்மானத்தினால் அக்கட்சி பிளவடைந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

மாகாண சபைகளுக்கான தேர்தல் சட்டத்தில் திருத்தச் சட்டமூலத்தை விவாதமின்றி நிறைவேற்றுவதற்குப் பொன்னான வாய்ப்பு காணப்பட்டபோதும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும், இலங்கைத் தமிழரசுக் கட்சியும் தங்களின் சொந்த அரசியல் காரணங்களுக்காக அதனைத் தவறவிட்டுள்ளன.

தொடர்ச்சி P12

# மொட்டிலிருந்து பிரிந்து கிண்ணத்தில் மலர்ந்தனர்



தாமரை மொட்டை சின்னமாகக் கொண்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து பிரிந்த பாராளுமன்ற உறுப்பினர்களால் புதிய அரசியல் கூட்டணி உத்தியோகப்பூர்வமான முறையில், வியாழக்கிழமை (05) அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவை வழங்கும் தீர்மானத்தை எடுத்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களால் இந்த புதிய அரசியல் கூட்டணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பொதுஜன ஐக்கிய சுதந்திர முன்னணிக்கு, பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமை வகிப்பதுடன், அமைச்சர் ரமேஷ் பத்திரண கட்சியின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பத்தரமுல்லை வோட்டர் எட்ஜ் ஹோட்டலில் இந்த நிகழ்வு வியாழக்கிழமை (05) காலை நடைபெற்றது.

இதன்போது, பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதை அடுத்து, புதிய அரசியல் கூட்டணி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இந்த நிகழ்வில் சுயேச்சை ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்ரமசிங்கவை ஆதரிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பல முக்கிய அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

தொடர்ச்சி P12

# ஜனநாயகத்தை பாதுகாக்கவே அரசியல் கூட்டணி

நாட்டில் ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தல் விடுக்கும் அரசியல் சக்தி தலைதூக்கியுள்ளதாகத் தெரிவித்துள்ள பொதுஜன ஐக்கிய சுதந்திர முன்னணியின் செயலாளர் ரமேஷ் பத்திரன, ஜனநாயகத்தை பாதுகாக்கவே புதிய அரசியல் கூட்டணியை ஸ்தாபித்துள்ளதாகக் கூறினார்.

அத்துடன், நாட்டில் உள்ள 69 இலட்ச மக்களின் வாக்குகள் தம்முடன் உள்ளதாகவும், தேசிய கூட்டணியாகத் தாம் எழுச்சிப் பெறுவோம் என்றும் ர மேஷ் பத்திரண குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் பொதுஜன ஐக்கிய சுதந்திர முன்னணி வியாழக்கிழமை (05) அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

அதன் பொதுச் செயலாளராக ரமேஷ் பத்திரண நியமிக்கப்பட்டார். இந்த நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதேவேளை, பொதுஜன ஐக்கிய சுதந்திர முன்னணியின் "கிண்ணம்" சின்னத்தில் எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தல் மற்றும் எதிர்வரும் தேர்தல்களின் போட்டியிடுவோம் என ரமேஷ் பத்திரண சுட்டிக்காட்டினார்.

# அரவிந்த குமாருக்கு எதிராக தீர்ப்பு: வீட்டையும் அபகரித்தனர்

கௌசல்யா



எவ்விதமான அனுமதியின்றி கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாசலம் அரவிந்த குமார் தனது பாதுகாப்பில் வைத்திருந்த ஹட்டன் தோட்ட நிறுவனத்திற்குச் சொந்தமான லிந்துல ஹெனஃபோல்ட் தோட்டத்தில் அமைந்துள்ள உத்தியோகபூர்வ இல்லம் நீதிமன்ற பதிவாளர், பிஸ்கல் அதிகாரிகளால், தோட்ட நிர்வாகத்திடம் வியாழக்கிழமை (05) ஒப்படைக்கப்பட்டது.

தோட்டத்தின் பிரதான எழுத்தராக 1987ஆம் ஆண்டு அரவிந்த குமார் பணியாற்றிய போது, தோட்ட நிர்வாகம், இந்த இல்லத்தை அரவிந்த குமாருக்கு உத்தியோகபூர்வ இல்லமாகப் பயன்படுத்துவதற்கு வழங்கியது, அரவிந்தகுமார் தோட்டத்தை விட்டு வெளியேறிய பின்னர், அந்த உத்தியோகபூர்வ இல்லத்தை மீண்டும் தோட்டத்திற்கு ஒப்படைக்காது, அதிலேயே வசித்து வந்துள்ளார்.

தொடர்ச்சி P12

# காணாமல் ஆக்கப்பட்ட 158 பேருக்கு நினைவேந்தல்

பேரின்பராஜா சபேஷ்

கிழக்குப் பல்கலைக் கழகத்தில் தஞ்சமடைந்த வேளை, இராணுவத்தினால் விசாரணைக்கு என அழைத்துச் சென்று காணாமல் ஆக்கப்பட்ட 158 பேரின் 34ஆவது ஆண்டு நினைவேந்தல் வியாழக்கிழமை(05) கிழக்கு பல்கலைக் கழக வந்தாறுமூலை வளாக முன்றலில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற நினைவேந்தலில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்ப உறவினர்கள் கலந்துகொண்டு கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டதுடன் மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

தொடர்ச்சி P12

PAGE 1 தொடர்ச்சிகள்

# நாட்டை பலியாக்க வேண்டாம்

அங்கு உரையாற்றிய பிரதமர் தினேஷ் குணவர்தன,

கொவுட் தொற்று நோய்க்குப் பிறகு, உலகப் பொருளாதாரம் சரிந்தது. இன்றும் அது மீளவில்லை. இதில் எழுந்த பெரும் சவாலுக்குத் தலைமை தாங்குவதற்காக 134 பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையானவர்கள் ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதியாக நியமித்தனர்.

எதிர்காலத்தில் பாராளுமன்றம் கலைக்கப்படும் என்பதை நாம் அறிவோம். எனவே தேசிய மற்றும் முற்போக்கு சக்திகள் கைகோர்க்கும் வகையில் பொதுஜன ஐக்கிய சுதந்திர முன்னணியின் உருவாக்கத்தை இந்நாட்டின் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயமாகவே நாம் கருதுகின்றோம்.

நாங்கள் வேறு பாதையில் செல்லவில்லை. இந்த நாடு பயணிக்க வேண்டிய தேசிய மற்றும் முற்போக்கான பயணத்தில் சாமானியர்களுடன் கைகோர்த்துப் பயணித்துள்ளோம். அதற்கு ஆதரவும் பங்களிப்பும் தேவை. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, நம் நாடு வரலாறு காணாத அரசியல் நெருக்கடியை எதிர்கொண்டது. யுத்த காலத்தில் கூட சந்திக்காத அந்த பெரும் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு, இந்த நாட்டின் ஜனநாயக மக்கள் வாக்குகளில் நம்பிக்கை வைத்து, நாம் கைகோர்த்து உருவாக்கிய புதிய பலத்தின் அதே பலத்துடன் இன்று இந்தப் பயணத்தை ஆரம்பிக்கின்றோம். கடந்த இரண்டு ஆண்டுகளில், ஒழுக்கத்துடன் பணியாற்றுவதன் மூலம் ஒரு நாட்டை வழிநடத்துவதன் மூலம் உருவாக்கக்கூடிய முடிவு வேகமாக இருப்பதைக் கண்டோம்.

அராஜகமான, ஆட்சியின்றி இருந்த நாட்டில் ஒழுக்கத்தின் மூலம் பொருளாதார முன்னேற்றம் பிறந்தது.

இந்த இரண்டு ஆண்டுகளில் ஜனாதிபதியின் தலையீட்டின் மூலம், அரசியல் கட்சிகள், அரசியல் சாராத சமூகத்தின் பல்வேறு முதலீட்டாளர்கள் மற்றும் பொருளாதார உற்பத்தியாளர்களுடன் இணைந்து பணியாற்ற முடிந்தது. ஒரு நிலையான அரசாங்கத்தை வழிநடத்த முடியும் என்ற நம்பிக்கையை மீண்டும் எழுப்பியுள்ள அந்த நடவடிக்கை தனித்துவமானது.

ஜனாதிபதித் தேர்தலில் ஒரு ஜனாதிபதி தெரிவு செய்யப்படுகிறார்.

அரசியலை ஆரம்பத்திலிருந்தே கற்றுக் கொள்ள வேண்டும் என்பது ஜனாதிபதிகளுக்குப் புரியவில்லை. அதிக வாக்குகள் பெற்றதால் உங்களுக்கு ஜனாதிபதி பதவி கிடைக்காது. நாட்டின் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்காக நாங்கள் நிற்கிறோம். அதன்படி எதிர்வரும் 21ஆம் திகதி முதல் மாபெரும் வெற்றியின் பங்காளிகளாக எமது முன்னணி செயற்படும் என்றார்.

# வீடுக்குள் புகுந்து தாக்கிய வன்முறை கும்பல்

இந்நிலையில், இந்த தாக்குதல் சம்பவம் குறித்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததுடன், ஊரவர்கள் இணைந்து, வன்முறையில் ஈடுபட்டவர்களை கைது செய்யுமாறு கூறி பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக கவனயீர்ப்பிலும் ஈடுபட்டனர்.

அந்தவகையில், விரைந்து செயற்பட்ட வட்டுக்கோட்டை பொலிஸார் சம்பவம் இடம்பெற்ற வீட்டினை பார்வையிட்டனர். அத்துடன் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவரை கைது செய்துள்ளதுடன், அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன், ஏனைய ஐவரையும் கைது செய்யும் நடவடிக்கைகளிலும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

# முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா நடுநிலை

2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் எந்தவொரு வேட்பாளருக்கும் தாம் ஆதரவு வழங்கவில்லை எனவும் எதிர்காலத்திலும் அவ்வாறு செய்வதற்கு எதிர்பார்ப்பு இல்லை எனவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னொருபோதும் இலங்கையின் எதிர்காலம் தொடர்பில் தற்போது போன்ற நிலையற்ற தன்மையும் சவாலும் இருந்தது இல்லை என அவர் கூறியுள்ளார்.

இந்த பாரதூரமான நிலைமை தொடர்பாக அனைத்து வாக்காளர்களும் சிந்திக்க வேண்டியுள்ளதாகவும் முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

தனி நபர் தொடர்பில் அல்லாமல் ஒவ்வொரு வேட்பாளரும் முன்வைத்துள்ள திட்டங்கள், கொள்கைகள், அந்தக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அவர்களிடமுள்ள திட்டங்கள், நடைமுறைகள், அந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்த இருப்பவர்களின் இயலுமை என்பன குறித்து வாக்காளர்கள் சிந்திக்க வேண்டும் எனவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு முக்கியத்துவம் வழங்கவும் கல்வி. சுகாதாரம், விவசாயம். கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சிகள், சர்வதேச வர்த்தகம் ஆகிய விடயங்கள் தொடர்பாக முக்கியத்துவம் வழங்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நேர்மை, நல்லாட்சி, ஊழல் ஒழிப்பு மற்றும் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி வேட்பாளர்களிடம் உறுதிமொழி கோரும் உரிமை வாக்காளர்களுக்கு உள்ளதெனவும் முன்னாள் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

ஆட்சி முறையின் நேர்மை மற்றும் பொறுப்புக் கூறலைக் கோரி 2 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பமான பாரிய மக்கள் போராட்டம் மாற்றத்தைக் கோரியதை மறக்கக் கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# அரவிந்த குமாருக்கு எதிராக தீர்ப்பு: வீட்டையும் அபகரித்தனர்

இந்த விவகாரம் தொடர்பில் தோட்ட நிர்வாகத்தினால், நுவரெலியா நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

நீண்டகாலமாக நிலுவையிலிருந்த வழக்கில் தீர்ப்பில், உத்தியோகபூர்வ இல்லத்தை விட்டு வெளியேறுமாறு அரவிந்த குமாருக்கு எதிராகத் தீர்ப்பளிக்கப்பட்டது. அந்த தீர்ப்பை எதிர்த்து . உயர் நீதிமன்றத்தில் அரவிந்த குமார் மேல்முறையீடு செய்திருந்தார். வீட்டை விட்டு வெளியேற வேண்டும்.

எனினும், நுவரெலியா நீதவான் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பை மேன்முறையீட்டு நீதிமன்றம் உறுதி செய்தது. இதனையடுத்து, நுவரெலியா மாவட்ட நீதிமன்ற நீதவானின் உத்தரவின் பேரில், மேற்படி நீதிமன்ற பதிவாளர் உள்ளிட்ட பிஸ்கல் உத்தியோகத்தர்கள் லிந்துலை பொலிஸ் அதிகாரிகளின் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் உத்தியோகபூர்வ இல்லகத்துக்குச் சென்று அரவிந்த குமாருக்கு சொந்தமான அனைத்து உடைமைகளையும் பட்டியலிட்டனர். வீடு மற்றும் அதன் நகலை நீதிமன்ற காவலில் வைத்து, வீடு மற்றும் உடைமைகள் தோட்ட நிர்வாக அதிகாரியிடம் ஒப்படைத்தனர்.

அரவிந்த குமார், அரசியலுக்கு வந்ததிலிருந்து, அரசியலின் அதிகாரத்தைப் பயன்படுத்தி, அந்த உத்தியோகபூர்வ இல்லத்தில் நீண்ட காலம் தங்கியிருந்ததாக ஹென்ஃபோல்ட் தோட்டத்தின் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

நீதிமன்றத்தினால் தோட்ட நிர்வாக அதிகாரியிடம் கையளிக்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லம், தோட்டத்தில் பணிபுரியும் மற்றுமொரு அதிகாரிக்கு உத்தியோகபூர்வ இல்லமாகப் பயன்படுத்தப்படவுள்ளதாகத் தோட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# உண்மையான வில்லன்களை தமிழர்களுக்கு தெரியும்

இலங்கைத் தமிழரசுக் கட்சி பல்வேறு தருணங்களில் மாகாண சபைகளுக்கான தேர்தல் பற்றியும் 13ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்து பற்றியும் அதிகமாகப் பேசுகின்றது, ஆனால், செயற்பாட்டில் வேறுபட்ட நிகழ்ச்சி நிரலை அக்கட்சியினர் கொண்டிருக்கின்றார்கள் என்பது தான் வெளிப்படுத்தப்படுகின்றது.

இந்த உண்மையை நான் சொன்னால், எனக்குத் தமிழ் சினிமாத் திரைப்படங்களில் வரும் 'வில்லன்' போன்று முத்திரை குத்துகிறார்கள். ஆனால், தமிழ் மக்களின் உண்மையான வில்லன்கள் யார் என்பதைத் தமிழ் மக்கள் தற்போது புரிந்து கொண்டிருப்பார்கள்.

ரணிலுக்கும் எனக்கும் உள்ள வித்தியாசம் தெளிவாக உங்களால் உணர்ந்து கொள்ள முடியும். நான் தமிழ் மக்களுக்கு உண்மையைச் சொல்கிறேன், ரணில் விக்ரமசிங்க தமிழ் மக்களை நம்பவைப்பதற்காக பொய் சொல்கிறார்.

மாகாண சபை முறைமைகள் விடயத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி மீண்டும் தனது மக்களைத் தோல்வியடையச் செய்துள்ளது, ரணில் மீண்டும் தமிழ் மக்களை முட்டாளாக்கியுள்ளார்.

இதேநேரம், இலங்கைத் தமிழரசுக் கட்சி தமிழ் மக்களின் நீண்டகாலமான தலைமைக் கட்சி என்ற பாத்திரத்தினை இனி வகிக்க முடியாத நிலையை அடைந்துள்ளது.

அந்தக் கட்சியினர் சஜித்தை ஆதரிக்கும் தீர்மானத்தினை எடுத்துள்ளதன் காரணமாக உட்கட்சிப் பிளவு வலுவாகியுள்ளது. தமிழ் மக்களுக்கான ஏகோபித்த தலைமையை அந்தக் கட்சியினால் வழங்க முடியாத பரிதாபமான நிலைமையை அடைந்துள்ளது என்று மேலும் தெரிவித்தார்.

# 173 முறைப்பாடுகள்; 22 பேர் கைது

தாக்குதல் மற்றும் தீ வைப்பு போன்ற குற்றச் செயல்கள் தொடர்பாக 54 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், தேர்தல் பிரசார துண்டுப் பிரசுரங்கள் தொடர்பிலும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அவர் கூறினார்.

அத்துடன், தேர்தல் தொடர்பான வன்முறை முறைப்பாடுகள் தொடர்பில் 22 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் நான்கு வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், குறித்த முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

# மொட்டிலிருந்து பிரிந்து கிண்ணத்தில் மலர்ந்தனர்

இந்த நிகழ்வின் போது, கூட்டணியின் உத்தியோகபூர்வ சின்னமாகக் கிண்ணம் சின்னம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்நிலையில், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவைப் பலப்படுத்தவுள்ளதாக புதிய கூட்டணி தெரிவித்துள்ளது.

# காணாமல் ஆக்கப்பட்ட 158 பேருக்கு நினைவேந்தல்

1990ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் பலம் பெற்றிருந்த நிலையில் பொலிஸ், இராணுவம் மற்றும் விசேட அதிரடிப்படை முகாம்கள் விடுதலைப் புலிகளினால் சுற்றிவளைக்கப்பட்டன. மோதல் தீவிரமடைந்தது. மட்டக்களப்பு மாவட்டத்தை நோக்கி நாலாபுறமும் இராணுவ நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டத்திற்குள் நுழைந்த இராணுவத்தினர் சில நாட்களில் அம்மாவட்டத்தை தமது நிலைகளை அமைத்துக்கொண்டனர்.

இந்த இராணுவ நடவடிக்கையின் போது, மக்கள் தங்கள் வாழ்விடங்களை விட்டு வெளியேறி வழிபாட்டுத் தலங்கள், பாடசாலைகள் உள்ளிட்ட பொது இடங்களில் பாதுகாப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தஞ்சம் பெற்றிருந்தனர். அக்காலத்தில் தஞ்சம் பெற்ற இடங்கள் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதல்கள் நடைபெற்றன. அங்கிருந்து விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்ட பலர் காணாமல் போயினர்.

அவ்வாறு காணாமல்போன சம்பவங்கள் நடைபெற்று 34 வருடங்கள் கடந்தும் அவர்கள் உயிருடன் இருப்பார்கள் என்ற நம்பிக்கையில் உறவினர்கள் இருந்தாலும் அவர்களுக்கு என்ன நடந்தது? என்ற வினாவுக்கு இதுவரை விடை கிடைக்கவில்லை.

கிழக்குப் பல்கலைக் கழக முகாமில் தஞ்சம் பெற்றிருந்தவர்களில் செப்டம்பர் 5ஆந் திகதி 158 பேர் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் காணாமல் ஆக்கப்பட்டாலும் உயிருடன் இருப்பார்கள் என்ற நம்பிக்கை இழந்த நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களின் பட்டியலில் இடம்பெறுகிறார்கள்.

கிழக்குப் பல்கலைக் கழக வந்தாறுமூலை வளாகத்தில் தஞ்சம் பெற்றிருந்த நிலையில் செப்டம்பர் 5ஆந் திகதி கிழக்குப் பல்கலைக் கழக படுகொலை நாள் என உள்ளூர் மக்கள் சமூக அமைப்புகளும் பிரகடனப்படுத்திநினைவுகூருகின்றனர்.

சம்பவ தினம் காலை 6மணிக்கு முன்னரே கிழக்குப் பல்கலைக் கழக வந்தாறுமூலை வளாகத்தில் இயங்கிய அகதி முகாம் இராணுவத்தினர் மற்றும் அவ்வேளை இராணுவத்தினருடன் இணைந்து செயற்பட்ட தமிழ் ஆயுதக்குழுக்களாலும் சுற்றிவளைக்கப்பட்டது. கொம்மாதுறை இராணுவ முகாமிலிருந்து வருகை தந்த இராணுவத்தினரே இந்த சுற்றிவளைப்பில் ஈடுபட்டனர். இந்த சுற்றிவளைப்பில் அவ்வேளை இராணுவ புலனாய்வில் செயற்பட்ட கெப்டன் முனாஸ்; (றிச்சட் டயஸ்) கெப்டன் பாலித, கப்டன் குணரத்னா, மேஜர் மஜீத், புளொட் மோகன் ஆகியோரும் வந்திருந்தாக காணாமல் போனோர் பற்றிய ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு விசாரணையின் போது சாட்டசியமளித்தவர்கள் தெரிவித்திருந்தனர்.

கிழக்கு பல்கலைக்கழக அகதி முகாமுக்குப் பொறுப்பாகப் பேராசிரியர் மனோ சபாரத்தினம், கலாநிதி த.ஜெயசிங்கம், கலாநிதி வி.சிவலிங்கம் ஆகியோர் இருந்தனர். அகதி முகாமுக்குள் நுழைந்த இராணுவம் தங்களை அறிமுகப்படுத்தி பின்னர் ஒலிபெருக்கி மூலம் குறிப்பிட்ட வயதுடையவர்களைக் கிழக்கு பல்கலைக்கழக மைதானத்தில் ஒன்றுகூடுமாறு அறிவித்தல் விடுத்துள்ளனர்.

மைதானத்தில் வரிசையில் நிறுத்தப்பட்டவர்கள் இராணுவத்தினரால் அழைத்துவரப்பட்ட முகமூடி மனிதர்கள் முன் நிறுத்தப்பட்டு முகமூடியினால் தலையாட்டப்பட்டவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு பஸ் வண்டிகளில் அழைத்துச் செல்லப்பட்டதாக இந்த சம்பவத்தை வருடங்கள் 34 கடந்தும் தங்கள் அனுபவ ரீதியாகப் பலரும் நினைவு கூருகிறார்கள்.

இந்த இராணுவச் சீருடையில் காணப்பட்ட முகமூடி நபர்கள் இராணுவத்தினருடன் இணைந்து செயற்பட்ட தமிழ் ஆயுதக்குழு உறுப்பினர்கள் மற்றும் முஸ்லிம்களாகவும் இருக்கலாம் என்ற சந்தேகமும் அவர்களிடம் காணப்படுகிறது.

இளைஞர்கள் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்ட சம்பவத்தையடுத்து கிழக்குப் பலகலைக் கழக அகதி முகாம் அல்லோல கல்லோகப்பட்டது எங்கும் அழுகைக் குரல்களையே கேட்க முடிந்தது. அவ்வேளை அந்த பிரதேசத்திலும் மாவட்டத்திலும் நிலவிய பாதுகாப்பற்ற சூழ்நிலை காரணமாக அவர்களைத் தேடிச் செல்ல முடியாதவாறு உறவினர்களும் முகாமுக்குள் முடங்கி கிடந்ததாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக மட்டக்களப்பு சமாதான குழு பாதுகாப்பு அமைச்சு உட்பட பல்வேறு தரப்பினரிடமும் முறைப்பாடு செய்தது.



# TFM மதிப்பு குறைந்தால் தடை விதிக்க வாய்ப்பு

அழகு நிலையங்களில் பயன்படுத்தப்படும் அனைத்து சவர்க்காரங்கள், ஷாம்புகள் மற்றும் அழகுசாதனப் பொருட்களுக்கு இலங்கை தர நிர்ணய சான்றிதழ் கட்டாயமாக்குவதற்கு அமைச்சரவை பத்திரத்தைச் சமர்ப்பிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் தெரிவித்தார்.

இலங்கை தர நிர்ணய பணியகத்தின் பரிந்துரைகளின்படி, இலங்கை சந்தையில் விற்பனைக்குக் கிடைக்கும் சவர்க்காரங்களின் TFM (Total fatty matter) பெறுமதி 78 ஆக இருக்க வேண்டும். எவ்வாறாயினும், நாட்டில் உள்ள பிரதான சவர்க்கார உற்பத்தி நிறுவனம் ஒன்றினால் தயாரிக்கப்பட்ட குழந்தை சோப்பை நுகர்வோர் விவகார அதிகாரசபை பரிசோதித்த போது அதன் TFM பெறுமதி 63 என கண்டறியப்பட்டுள்ளது.

இந்த நிறுவனமும் ஏனைய நிறுவனங்களும் நிர்ணயிக்கப்பட்ட TFM பெறுமதியுடன் சவர்க்காரத்தை உற்பத்தி செய்கின்றனவா என்பதை அவ்வப்போது பரிசோதிக்க நுகர்வோர் விவகார அதிகாரசபை ஏற்பாடு செய்துள்ளது. குழந்தையின் உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் வகையில் குறைந்த TFM மதிப்புள்ள குழந்தை சவர்க்காரத்தைத் தயாரித்ததற்காக நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட நிறுவனம் தொடர்ந்து தரம் குறைந்த சவர்க்காரத்தைத் தயாரித்தால் இதன் உற்பத்தி நடவடிக்கைகளுக்கு நீதிமன்றத்தினால் தடை விதிக்க வாய்ப்பு உள்ளதாகவும் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

# வெருகலில் கொடியேற்றம்

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற வெருகலம்பதி ஸ்ரீ சித்திர வேலாயுதர் சுவாமி ஆலய வருடாந்த மகோற்சவத்தின் கொடியேற்றத் திருவிழா புதன்கிழமை (04) காலை பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

– வி.ரி.சகாதேவராஜா















“சுமந்திரனின் சட்டமூலத்தை நீக்கச் செய்தது

# முறையற்ற செயல்”

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அங்கீகாரத்தை அளித்து விட்டு, தனக்கு ஆதரவு அளிக்காத சுமந்திரன் எம்.பி. கொண்டு வந்த மாகாண தேர்தல் திருத்தச் சட்டமூலத்தை நிரலிலிருந்து நீக்கச் செய்திருப்பதன் மூலம் பாராளுமன்றத்தின் நடைமுறைகளை மீறியுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் விசனம் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து மன்னாரில் செவ்வாய்க்கிழமை(03) நடைபெற்ற ஐக்கிய மக்கள் முன்னணியின் பிரசாரக் கூட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் உரையாற்றியபோதே இதனை கூறினார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்,

புதன்கிழமை (3) காலை பாராளுமன்றத்தில் சுமந்திரன் எம்.பி. கொண்டு வந்த சட்டமூலம் மூலம் மாகாண சபைக்கு இருக்கின்ற தேர்தல் முறையை மாற்றுவதற்கான விடயத்துக்கு அவராக அங்கீகாரம் கொடுத்து விட்டு தனக்கு ஆதரவு தரவில்லை என்ற காரணத்தினால், கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுத்த முடிவையும் மீறி இன்று (3) நிகழ்ச்சி நிரலிருந்து மாகாண தேர்தல் திருத்தச் சட்டமூலத்தை நீக்கச் செய்திருப்பதன் மூலம் பாராளுமன்றத்தின் நடைமுறைகளை மாத்திரமல்ல, காலம் காலம் இருந்து வந்த மரபுகளையும் மீறி ஒரு சர்வாதிகாரியாக நடந்து கொள்கின்றார்.

> செய்த பிழைக்குப் பிராயச்சித்தமாக மாகாணசபைகளை மீண்டும் நிறுவுவதற்கான அந்த தேர்தல் முறை மாற்றத்துக்கான சட்ட மூலத்தையும் இன்று வாக்கெடுப்புக்கு விடாமல் வேண்டுமென்று தடுத்ததன மூலம் தன்னுடைய சுயரூபத்தை ரணில் விக்ரமசிங்க தமிழ் பேசும் சமூகங்களுக்கு வெளிக்காட்டியிருக்கின்றார்



அவர் தோற்கப்போகும் தேர்தல் என்று தெரிந்தும் கூட, கடைசிக் கட்டதிலாவது தானாக செய்த பிழைக்குப் பிராயச்சித்தமாக மாகாணசபைகளை மீண்டும் நிறுவுவதற்கான அந்த தேர்தல் முறை மாற்றத்துக்கான சட்ட மூலத்தையும் இன்று வாக்கெடுப்புக்கு விடாமல் வேண்டுமென்று தடுத்ததன மூலம் தன்னுடைய சுயரூபத்தை ரணில் விக்ரமசிங்க தமிழ் பேசும் சமூகங்களுக்கு வெளிக்காட்டியிருக்கின்றார்.

வடகிழக்கிலே தமிழர்களும் முஸ்லிம்களும் அதிகாரத்தை அனுபவிப்பதற்கு தங்களுடைய பிரதேசங்களில் சுயாட்சியைச் செய்வதற்கான குறைந்த பட்ச அதிகாரங்களையாவது கொண்டிருக்கின்ற மாகாணங்களையும் முழுமையாக செயலிழக்கச் செய்து அதை உயிர்ப்பிப்பதற்கான வாய்ப்பை பாராளுமன்றத்தில் ரணில் விக்ரமசிங்க நிராகரித்திருக்கிறார் என்பது அவருக்கு வக்காலத்து வாங்குகின்ற ஒரு சிலருக்காவது படிப்பினையாக இருக்க வேண்டும். என்பதை நான் இங்கு சொல்லிவைக்க விரும்புகின்றேன்.

கள நிலைவரங்களைச் சிந்தித்து எடுத்த தீர்மானம் குறித்து தமிழரசுக் கட்சியை நாம் வாழ்த்த வேண்டும். எனவும் கூறியுள்ளார்.

## ‘தரங் சக்தி’ பயிற்சியில் இலங்கை விமானம்



இலங்கை விமானப்படைக்கு சொந்தமான பீச்கிராஃப்ட் விமானம் இந்திய விமானப்படையால் ஏற்பாடு செய்யப்பட்ட ‘தரங் சக்தி’ வான் போர் பயிற்சியில் இணைந்தது.

மேலும் இந்த பயிற்சியில் 11 நாடுகளைச் சேர்ந்த சுமார் 150 விமானங்கள் பங்கேற்றன.

‘தரங் சக்தி’ விமானப் போர் பயிற்சியின் முதல் கட்டம் 2024 ஆகஸ்ட் 06 முதல் 14ஆம் திகதி வரை இந்தியாவின் தமிழ்நாடு, சூலூர் விமானப்படை தளத்தில் வெற்றிகரமாக நடத்தப்பட்டதுடன், இரண்டாவது மற்றும் இறுதிக் கட்ட பயிற்சிகள் 14 செப்டெம்பர் 2024 அன்று ராஜஸ்தானில் உள்ள ஜோத்பூர் விமானப்படைத் தளத்தில் நடைபெற உள்ளது. இந்த விமான போர் பயிற்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் இலங்கை விமானப்படையின் பீச்கிராஃப்ட் விமானம் பங்களிப்பை வழங்கியுள்ளது.

பூகோள பாதுகாப்பு ஒத்துழைப்பை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் இந்தியாவினால் இதுவரை நடத்தப்பட்ட மிகப்பெரிய சர்வதேச விமானப் பயிற்சியான ‘தரங் சக்தி’ பயிற்சியில் இலங்கை விமானப்படை பங்குபற்றுவதன் மூலம் இலங்கை விமானப்படைக்கு சர்வதேச இராணுவ உறவுகளை வலுப்படுத்துவதற்கான வாய்ப்புகள் அமைவதுடன், இலங்கை விமானப்படையின் விமானிகள் மற்றும் விமானப் பணியாளர்களுக்கு இதனூடாக புதிய அனுபவத்தைப் பெறுவதற்கான வாய்ப்பு கிடைக்கப்பெற்றது.

## சமிந்த மகனுடன் இணைந்தவர் கைது

பிரபல போதைப்பொருள் கடத்தல்காரரான “தெமட்டகொடை சமிந்த”வின் மகனான மலீஷ என்பவருடன் இணைந்து போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இளைஞன் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொத்தடுவ பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞன் ஒருவனே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவரிடமிருந்து 13 கிராம் 250 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் இலத்திரனியல் தராசு என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து, சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக கொத்தடுவ பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

## கருணை கொலை செய்யுமாறு முதியவர் கோரிக்கை

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்தில் உறவினர்கள் மற்றும் முதியோர் இல்லங்களால் கைவிடப்பட்ட முதியவர் ஒருவர் தன்னை கருணை கொலை செய்யுமாறு, வடமாகாண ஆளுநர் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் ஆகியோரிடம் கடிதம் மூலம் கோரியுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளையதம்பி ஜெயக்குமார் என்ற முதியவரே இவ்வாறு கோரியுள்ளார்.

குறித்த முதியவர் ஒரு காலை இழந்து, நோய்வாய்ப்பட்டு ஆதரவற்ற நிலையில் மானிப்பாய் உதயதாரகை சன சமூக நிலையத்தில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் தஞ்சமடைந்துள்ளார்.

அவரை அப்பகுதி மக்கள் முதியோர் இல்லம் ஒன்றில் சேர்க்க முயற்சிகள் எடுத்தனர். முதியோர் இல்லங்கள் அவரை ஏற்க மறுத்த நிலையில், கிராம சேவையாளரின் சிபாரிசு கடிதத்துடன், முயற்சிகளை மேற்கொண்ட நிலையில் எந்த முதியோர் இல்லமும் அவரை சேர்க்கவில்லை

இந்நிலையில், பிரதேச செயலாளரின் சிபாரிசு கடிதத்துடன் பளையில் உள்ள முதியோர் இல்லம் ஒன்றில் சேர்ப்பதற்காக தமது செலவில் வாகனம் ஒன்றில் அவரை ஊரவர்கள் அழைத்துச் சென்ற போதிலும், அங்கும் அவரை சேர்த்துக் கொள்ள நிர்வாகம் மறுத்துள்ளது.

அதனால் மீண்டும் தமது சனசமூக நிலையத்திற்கு அவரை அழைத்து வந்திருந்தனர்.

எந்தவொரு முதியோர் இல்லங்களோ, அமைப்புக்களோ, நிறுவனங்களோ தன்னை பொறுப்பேற்காததால், தன்னை கருணை கொலை செய்து விடுமாறு, வடமாகாண ஆளுநர் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளரிடம் கடிதம் மூலம் கோரியுள்ளார்.

## ‘டிக் டொக்’ பெண்கள் கைது

எம்.றொசாந்த்

‘டிக் டொக்’ வீடியோக்களை அனுப்பி, சுவிஸ் நாட்டில் வசித்து வரும் 52 வயதுடைய நபர் ஒருவரிடம் இருந்து சுமார் 45 இலட்ச ரூபாய்க்கு மேல் மோசடி செய்த குற்றச்சாட்டில் மூன்று பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுவிஸ் நாட்டில் வசித்து வந்த யாழ்ப்பாணத்தை சேர்ந்த நபர் ஒருவரின் வாட்ஸ்அப் இலக்கத்திற்கு பெண்ணொருவரின் டிக் டொக் வீடியோக்கள் அனுப்பப்பட்டுள்ளன. வீடியோக்களை பார்த்து, வீடியோக்கள் வரும் அந்த தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகளை பேணியுள்ளார்.

அந்த இலக்கத்தில் இருந்து கதைத்த பெண்ணும் தனக்கு 22 வயது என்றும் தான் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர் எனவும் கூறி பழக ஆரம்பித்துள்ளனர். பின்னர் அந்தப் பழக்கம் நெருங்கிய தொடர்பாக மாற, பல்வேறு கட்டங்களில், பல்வேறு காரணங்களைக் கூறி சுமார் 45 இலட்சத்துக்கும் மேலாகப் பணம் பெற்றுள்ளார்.

பெண்ணிடம் வீடியோ கோல் கதைப்பதற்காக பலமுறை சுவிஸ் நாட்டவர் முயற்சித்த போதிலும், அந்தப் பெண் அதற்கு மறுப்பு தெரிவித்து வந்த நிலையில், அண்மையில் குறித்த நபர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ளாவர், இதன்போது, பெண்ணை நேரில் சந்திக்கக் கோரிய போதிலும், அப்பெண் நேரில் சந்திக்க மறுப்பு தெரிவித்து, தொடர்பைத் துண்டிக்க, சந்தேகமடைந்தவர் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், டிக் டொக் வீடியோவில் காணப்பட்ட பெண்ணை கைது செய்து விசாரணை செய்த போது, அப்பெண்ணுக்கு இந்த சம்பவத்திற்கும் தொடர்பு இல்லை என்பது தெரியவந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து சுவிஸ் நாட்டில் இருந்து பணம் போடப்பட்ட வங்கி கணக்கு இலக்கத்தின் அடிப்படையில், விசாரணைகளை முன்னெடுத்து , கணக்கிலக்கத்திற்கு சொந்தமான பெண்ணை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்த போது , தனக்குத் தெரிந்தவர் தான் எனது கணக்கு இலக்கத்திற்கு பணம் போடச் சொல்லி, பணம் போடப்பட்டது என கூறியுள்ளார்.

## மாபெரும் கைத்தொழில் கண்காட்சி

எம்.யூ.எம்.சனூன்

புத்தளம்-பாலாவி முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கையகத்தினால் நடத்தப்பட இருக்கின்ற சிறு கைத்தொழில் முயற்சியாளர்களுடைய மாபெரும் கைத்தொழில் கண்காட்சியும் மலிவு விற்பனையும் வெள்ளிக்கிழமை (06) மற்றும் சனிக்கிழமை(07) புத்தளம் நகர மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.



முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கையகத்தினால் பயிற்றுவிக்கப்பட்ட பெண்களுடைய பாரம்பரியமான முறையில் உற்பத்தி செய்யப்பட்ட கைவினைப் பொருட்கள், சவர்க்கார வகைகள், ஸ்கிரீன் பிரிண்டிங், அலங்கார பொருட்கள், ஆடை வகைகள், மூலிகைச் செடிகள், பூ மரங்கள் மற்றும் உணவு வகைகள் என பெண்களுடைய பல்வேறு உற்பத்தி பொருட்கள் இங்கு காட்சிப்படுத்தப்பட இருப்பதோடு விற்பனையும் செய்யப்பட உள்ளது என தெரியவந்துள்ளது.

## தபால் மூல வாக்களிப்பு







இலங்கையின் 9ஆவது ஜனாதிபதியை தெரிவு செய்யும் தேர்தலின் தபால் மூல வாக்குப்பதிவு வியாழக்கிழமையும் (05) இடம்பெற்றது. புதன்கிழமை (04) ஆரம்பமான தபால்மூல வாக்குப்பதிவு, வெள்ளிக்கிழமை (06) இடம்பெறும்.

எஸ்.ஆர்.லெம்பேட், பு.கஜிந்தன், வி.சுகிர்தகுமார் , தீஷான் அஹமட், ஏ.எச் ஹஸ்பர், எம்.ஏ.றமீஸ்,எம்.எஸ்.எம். நூர்தீன்

# குரங்கம்மையை தடுக்க சரியான விழிப்புணர்வு அவசியம்

பல்வேறு வகையான வைரஸ்கள் அவ்வப்போது உலகம் முழுவதும் பரவுவதில் ஆச்சரியமில்லை. சமீபகாலமாக உலகம் முழுவதும் பரவிய கொவிட் வைரஸுக்கு பின்னர், ஆப்பிரிக்காவில் குரங்கம்மை என்ற வைரஸ் மிகவேகமாகப் பரவத் தொடங்கியுள்ளது.

கொங்கோ குடியரசில் இருந்து பரவியதாகக் கூறப்படும் குரங்கம்மை, ஆபிரிக்க பிராந்தியத்தில் உள்ள 13 நாடுகளில் பரவியுள்ளது. வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 548 ஆகவும், பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 16,000ஐத் தாண்டியுள்ளது. நிலைமையைக் கவனத்தில் கொண்டு, ஆகஸ்ட் 14 அன்று உலகளாவிய அவசரநிலையை உலக சுகாதார நிறுவனம் அறிவித்தது.

இரண்டு ஆண்டுகளில் உலக சுகாதார நிறுவனம் குரங்கம்மையை அவசரநிலையாக அறிவித்தது இது இரண்டாவது முறையாகும், மேலும், உலக சுகாதார அமைப்பு முதன்முதலில் ஜூலை 2022இல் வைரஸின் குறைவான வைரஸ் விகாரத்தை வெளிப்படுத்தியது. குரங்கு காய்ச்சல் ஆரம்பக் கட்டத்தில் விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்குப் பரவி பின்னர் மனிதர்களிடையே பரவியதாகக் கூறப்படுகிறது. 1958இல் குரங்குகளில் கண்டறியப்பட்டதால் இதற்கு 'குரங்கு காய்ச்சல்' என பெயரிடப்பட்டது, மேலும், 1970இல் கொங்கோவில் முதல் நோயாளி அடையாளம் காணப்பட்டார்.

குரங்கு காய்ச்சல் அல்லது குரங்கம்மையை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்த முடியும் என உலக சுகாதார நிறுவனம் கடந்த ஆகஸ்ட் 20ஆம் திகதி அறிவித்தது. இது ஒரு புதிய வகை தொற்றுநோய், ஆனால், இது கொவிட்-19 போன்ற விரைவான பரவலைக் காட்டாது, மேலும் குரங்கு காய்ச்சலைக் கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என உலக சுகாதார அமைப்பின் ஐரோப்பாவிற்கான பிராந்திய இயக்குநர் மருத்துவர் ஹான்ஸ் க்ளூக் தெரிவித்திருந்தார்.

எவ்வாறாயினும், இந்த புதிய வைரஸ் பரவியதைக் கேள்விப்பட்டபோது, குரங்குக் காய்ச்சல் இலங்கையிலும் நுழையும் என்ற அச்சம் ஏற்பட்டது. ஆனால், சுகாதார அமைச்சினால் முறையான திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சின் செயலாளர் டொக்டர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

நிபுணர் குழுவொன்று உடனடியாகக் கூட்டப்பட்டு, நோய்க்கான சிறந்த தயாரிப்பு மற்றும் பதிலளிப்புக்குத் தேவையான வழிகாட்டுதல்களை வழங்கியதுடன், அது தொடர்பான அறிவுறுத்தல்கள் அடங்கிய சுற்றறிக்கை அனைத்து சுகாதார நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

விமான நிலையங்களின் ஊடாக நாட்டிற்குள் பிரவேசிக்கக்கூடிய குரங்கம்மை நோயாளர்களை அடையாளம் காணும் வகையில், நாடு முழுவதும் கண்டறியும் முறையை சுகாதார அமைச்சு பலப்படுத்தியுள்ளது. கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தில் குரங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களைக் கண்டறிவதற்கான ஆய்வக வசதிகள் உள்ளன.

சர்வதேச கவனத்திற்கு உரிய பொதுச் சுகாதார அவசரநிலை என உலக சுகாதார ஸ்தாபனம் பிரகடனப்படுத்திய பின்னர், ஆசிய பிராந்தியத்தில் மிக சில நாடுகளில் இந்த நோய் பதிவாகியுள்ளதாக அறியமுடிகின்றது. ஆயினும்கூட, நோயைத் தடுக்க பொதுமக்களின் சரியான விழிப்புணர்வும் அவசியமாகும் என்பதை நாமும் வலியுறுத்துகின்றோம்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

ஞானத்தைத் தேடுபவர்களில் பலர் ஆசைகளைப் பெருக்கியபடியேதான் இருக்கின்றார்கள். ஞானம் என்பது கடைச்சரக்கு அல்ல, அறிவுக்கும் மேலான மெய் அறிவு.

சாதாரணமான விடயமாக ஆன்ம ஞானத்தை நினைத்தலாகாது. பூரணத்துவமானவர்கள் மௌனமானவர்களாக இருக்கிறார்கள்.

ஆனால், அதிகம் பேசி மக்களைக் குழப்பும் 'சுவாமி'கள் என்று தங்களைத் தாங்களே முத்திரை குத்திக் கொள்பவர்கள் அதிகமாகி விட்டார்கள்.

எதையும் எதிர்பாராத, சுயநலன் எதுவும் அற்ற, ஆசைகளோடு இணையாத, தூயநெஞ்சு உடைய மனிதனே, ஆன்மிகம் பற்றிப் பேசுவதற்கு உரிமை உள்ளவன் ஆவான்.

செல்வம், புகழ், அதிகாரம் உள்ளவர்கள் பின்னால் செல்பவர்களால், ஆன்ம அறிவு பெறுவது எப்படி?

சகல கல்வியறிவையும் மக்கள் தேடிப் பெற வேண்டும். கல்வி ஒருவருக்கு அவசியமானது. பெற்ற கல்வியைப் புனிதமாகக் கொண்டு இயங்க வேண்டும்.

எளியோருக்கு இரங்குதல், வசதியற்றவர்களுக்கு இலவச கல்வியூட்டல், பொதுநல சேவை எல்லாமே தர்மத்துடன் இணைந்தவை. ஆன்ம எழுச்சியை உருவாக்குக!

நன்றி-பருத்தியூர் பால. வயிரவநாதன்



தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

போரின் முடிவின் 15 ஆண்டுகளின் பின் – 16

# அனுசரணை அரசியலின் நிறுவனமயமாக்கல்

இலங்கையில் அனுசரணை அரசியல் தவிர்க்கவியலாததாகவும் சிறுபான்மையினருக்கு பாதிப்பு விளைவிப்பதாகவும் அமைந்தமைக்கான காரணங்களிலொன்று அரச நிறுவனங்கள் அனுசரணை அரசியலுக்கு ஆதரவாக செயற்பட்டமையாகும். அரச கட்டமைப்பில் நிறுவனங்கள், அரசாங்கத்தின் நடத்தைகளைக் கட்டுப்படுத்துதல், விருப்பத் தேர்வுகள், இலக்குகள், உத்திகள் மற்றும் அடையாளங்களை வடிவமைப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஒரு தேசிய நிர்வாக அமைப்பை விரிவுபடுத்துவதற்கு முன் அல்லது ஒரே நேரத்தில் அரசியலில் பெருமளவிலான ஒருங்கிணைப்பு நிகழும்போது, அந்த அமைப்பு அனுசரணை அரசியல் மற்றும் அனுசரணை நியமனங்களை அடிப்படையாகக் கொண்டது. உயரடுக்கிற்கு இடையேயான மோதல்கள், தேசிய அரசியலில் கீழ் வகுப்பினரை பெருமளவில் இணைத்துக் கொள்ளும் அதேநேரம், அரசைக் கட்டியெழுப்பும் பாதைகள் ஆகியவற்றுக்கு இடையே எவ்வளவு முக்கியமான தொடர்புகளை ஏற்படுத்தலாம் என்பதை இலங்கையின் கதை காட்டுகிறது. இத்தகைய ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட கூறுகள் அரசியல் ஆதரவின் நோக்கங்களுக்காக அரச நிறுவனங்களைத் துஷ்பிரயோகம் செய்ய ஆளும் உயரடுக்குகளை ஊக்குவிக்கின்றன. பொதுவாக, அரசு, பொருளாதாரம் மற்றும் சமூகம் ஆகியவற்றுக்கு இடையே இடைத்தரகர்களாக அரசியல் உயரடுக்குகளை செயல்படுத்துவதில் அரசு நிறுவனங்கள் நேரடிப் பங்கு வகிக்கின்றன. இலங்கையின் உதாரணம், அரச இயந்திரத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட நிறுவன மாற்றங்களை, பிரிவினைவாத ஆளும் உயரடுக்கின் மேலாதிக்கத்தைக் கட்டியெழுப்பும் திட்டத்தைத் தொடர நிறுவனமயப்படுத்தப்பட்ட அனுசரணை அமைப்புக்கு நிதியளிப்பதுடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளது அல்லது முழுமையாக இணைந்திருப்பதைக் காட்டுகிறது.

சுதந்திரத்தை நோக்கி, பிரித்தானியர்களால் விதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு அளவுகோல்கள் தளர்த்தப்பட்டதால், மேல்தட்டு ஆண்கள் புகழ்பெற்ற இலங்கை நிர்வாக சேவையில் பணியமர்வது எளிதாகி விட்டது. அரசியல் உயரடுக்குகளின் கண்ணோட்டத்தில், கொலனித்துவ காலத்தில் பிரிட்டிஷ் அதிகாரத்துவம் மற்றும் உள்ளூர் சிவில் சேவையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்கள் உள்ளூர் சமூகத்திற்கு அந்நியமானவர்கள். கொலனித்துவ ஆட்சியின் போது, அரசு ஊழியர்கள் மேற்கத்திய விழுமியங்களுக்கு சித்தாந்த ரீதியாக அடிபணிய வேண்டும் என்ற தேவையுடன் 'தகுதியுடையோர்' என்பது இணைக்கப்பட்டது. கொலனித்துவ சேவையில் அரசு ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான ஒருங்கிணைந்த அடிப்படையாக இவை இருந்தன. அரசியல் உயரடுக்கின் மீது இந்த நிர்வாகிகள் கட்டளையிடுவதற்காக, அதிகாரத்துவத்தினர் அதிருப்தி அடைந்தனர். குறிப்பாக அரசியல் உயரடுக்குகள் சாதாரண மக்களிடமிருந்து ஒரு ஆணையைப் பெற்றிருந்த நிலையில், இது மேலும் சிக்கலுக்குரியதாயிற்று. அரசியல் உயரடுக்கின் கூற்றுப்படி, உயர்தர வர்க்க, சரளமாக ஆங்கிலம் பேசும் அதிகாரத்துவ உயரடுக்குகள் உள்ளூர் யதார்த்தங்கள் மற்றும் சமூகங்களிலிருந்து விலகி, அவர்களின் பிரச்சினைகளுக்கு உணர்ச்சியற்றவர்களாக இருந்தனர். பொதுச் சேவை பிரச்சினைகள் தொடர்பாக அரசியல் உயரடுக்கினரின் ஆலோசனைகளை அரசியல் அதிகாரத்தில் இருந்தோர் விமர்சனமின்றி பின்பற்றவில்லை.

இது நிர்வாக சேவையின் அதிகாரத்துக்கும் ஆட்சியதிகாரத்துக்கும் இடையிலான கெடுபிடிப்போராக மாறியது. அரச நிர்வாக சேவையினர் தமது ஆலோசனைகள் புறக்கணிக்கப்படுவதாகக் குற்றஞ்சாட்டினர். அதேவேளை, இவர்களது நடத்தையானது, அரசு ஊழியர்கள் அதிகாரத்தில் இருக்கும் ஆட்சிக்கு விசுவாசமின்மையாக நடந்து கொள்கிறார்கள் என்ற எண்ணத்தையும் அவர்கள் பற்றிய ஏமாற்றத்தையும் அரசியல் உயரடுக்கிலிருந்தோர் கொண்டிருந்தனர்.

அதிகாரத்துவ உயரடுக்கின் எதிர்மறையான பார்வைகளை ஊக்குவிப்பதன் மூலம், புதிய ஆளும் அரசியல் உயரடுக்குகள், நிர்வாக சேவையினரின் மனப்பான்மையே பொதுச்சேவைகள் விரைவில் பொதுமக்களிடம் சென்றடைவதற்கு ஒரு தடையாக இருக்கின்றது என்பதை வெளிப்படையாகப் பேசத் தொடங்கினர். சுதந்திரத்திற்குப் பிந்தைய ஆரம்ப ஆண்டுகளில், அரசியல்வாதிகள் மற்றும் உயரடுக்கு அதிகாரிகளுக்கு இடையே தனித்த பதட்டங்கள் வெளிப்பட்டன. உண்மையில், இத்தகைய பதட்டங்கள் சிவில் சேவையின் தரத்துடன் சிறிதும் சம்பந்தப்படவில்லை. மாறாக, அதிகாரத்துவ உயரடுக்கினருக்கு விரோதமான எனக் கருதப்பட்டவை, அரசு இயந்திரங்கள் மற்றும் வெகுஜனங்களின் மீதான கட்டுப்பாடு, சட்டப்பூர்வத்தன்மை போன்ற விடயங்களிலேயே மையங் கொண்டிருந்தன. அடிப்படையில் அதிகாரத்திற்காக இரு குழுக்களுக்கிடையில் விரியும் அதிகாரப் போராட்டத்தின் ஒரு பகுதியாகவே இப்பதட்டங்கள் அமைந்தன.

அதிகாரத்துவ மற்றும் அரசியல் உயரடுக்குகளுக்கிடையில் போட்டியிடும் மற்றும் மாற்றும் அதிகார உறவுகள் உள்ளூர் சமூக மட்டத்திலும் வெளிப்பட்டன. அரச நிர்வாகத்தை முழுவதுமான ஆட்சி அதிகாரத்தின் கீழானதாக, அடிபணிந்ததாகக் கட்டியெழுப்ப அரசியல் அதிகார வர்க்கம் முயற்சித்தது. இதற்காக மக்கள் சம்மதத்தைப் பெறவும் அவர்கள் முயற்சித்தார்கள். மேலாதிக்கத்தைக் கட்டியெழுப்பும் உத்திகளின் பார்வையில், இந்த சீர்திருத்தங்கள் பெரும்பாலும் சம்மதத்தைக் கட்டியெழுப்புவதை உள்ளடக்கியது. ஆனால் எங்கெல்லாம் சம்மதத்தைக் கட்டியெழுப்பும் உத்திகள் தோல்வியுற்றாலும், ஆளும் உயரடுக்கினர் கட்டாய உத்திகளைக் கையாண்டனர்.

இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னர், அரசியல் உயரடுக்குகளால் வாக்காளர்களின் உணர்வுகளைப் புறக்கணிக்க முடியாது என்பது புலனானது. இலங்கையின் அரசியல் - குறிப்பாக அவ்வப்போது நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தல்களின் முடிவுகள் - அரசியல்வாதிகள் மற்றும் அவர்கள் பிரதிநிதித்துவம் செய்ய விரும்பும் சமூகங்கள் ஆகிய இருவருக்கும் கணிசமான முக்கியத்துவம் வாய்ந்த விஷயமாக மாறியது. பல வழிகளில், அரசியல் உயரடுக்குகள் பாதிக்கப்படக்கூடிய நிலையிலிருந்தனர். ஆனால், நிர்வாகத்தினர் அவ்வாறல்ல. அவர்களுக்கென்று சில ஆதாரங்கள் இருந்தன, அதிகாரத்துவ உயரடுக்கினருடன் ஒப்பிடுகையில், பெரும்பாலும் வாழ்க்கைக்கான நிரந்தர வேலைகளில் மிகவும் பாதுகாப்பான நிலையை அனுபவித்தனர். அரசியல் உயரடுக்கின் மீது அழுத்தங்கள் அதிகரித்ததால், உள்ளூர் சமூகங்கள் அதிக வளங்கள் தேவை என்ற கோரிக்கையானது, ஆளும் அரசியல் உயரடுக்கினரை சிக்கலில் ஆழ்த்தியது. இந்த காலகட்டத்தில், அரசியல்வாதிகள் மற்றும் அரசு அதிகாரிகளுக்கு இடையிலான பதட்டங்கள், அரச நிர்வாகத்தில் பல தற்காலிக சீர்திருத்தங்களைத் தூண்டின, இவை அனைத்தும் அரச நிர்வாகத்தின் பாதுகாப்பான நிலையை குறைமதிப்பிற்கு உட்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தக. அரசியல்வாதிகளின் சொந்த நலன்களை சுட்டிக்காட்டி, ஆட்சியில் இருக்கும் ஆட்சியினால் இயற்றப்பட்ட சீர்திருத்தங்களை அரசு ஊழியர்கள் அடிக்கடி நிராகரித்தனர், இது அரசியல் உயரடுக்கினரால் அரச நிர்வாகமானது மொத்தமாக அரசியல்மயமாக்குவதாக குற்றச்சாட்டுகளுக்கு வழிவகுத்தது.

சுதந்திரத்திற்குப் பிறகு முதல் மூன்று தசாப்தங்களில் பதவிக்கு வந்த அரசாங்கங்கள், அரச நிர்வாகத்தைப் பாதிக்கும் வகையில் மொத்தம் 30 தனித்தனி சீர்திருத்த மசோதாக்களை அறிமுகப்படுத்தின. இந்த சீர்திருத்தங்கள் அனைத்தும், குறைந்த பட்சம், நிர்வாக சேவை ஊழியர்களின் சுதந்திரமான அதிகாரத்தைக் குறைப்பதற்காகவும், அரசியல் உயரடுக்கினரின் அதிகாரம் மற்றும் செல்வாக்கை மேம்படுத்தவும், பொது வளங்கள் மற்றும் அவற்றின் விநியோகம் மீதான அவர்களின் கட்டுப்பாட்டை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டிருந்தன.

ஆங்கிலேயர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட அரச கட்டமைப்புகள் மற்றும் நிறுவன மாற்றங்கள் அடுத்தடுத்த தசாப்தங்களில் அரச-கட்டுமான திட்டத்தை மறுவடிவமைப்பதில் முக்கியமாக இருந்தன. பிரித்தானிய கொலனித்துவ காலத்தில் நிறுவப்பட்ட நிர்வாகத்தின் நிறுவன அமைப்பு, ஒரு அரை-ஆதரவு முறை எவ்வாறு வளர்க்கப்பட்டது என்பதைக் காட்டுகிறது. ஆனால் சுதந்திரத்துக்குப் பிந்தைய ஆண்டுகளில் அரசு நிறுவனங்களின் செயல்பாடுகள், தாழ்த்தப்பட்ட மக்களைத் தேர்தல் கட்சி அரசியலுக்குள் நிலையான அரசியல் அணிதிரட்டுவதற்கான கருவியாக மாற்றப்பட்டது. ஒட்டுமொத்தமாக, உயரடுக்குகளின் மேலாதிக்கத்தைக் கட்டியெழுப்பும் திட்டத்தை முன்னெடுப்பதற்குப் பயனளிக்கும் வகையில் ஒப்புதல் அடிப்படையிலான அரசியல் கூட்டணியை உருவாக்குவதே இதன் இலக்காக இருந்தது.

அரச நிறுவனம் முழுவதும் அனுசரணை அரசியலை நிறுவனமயப்படுத்துவது எப்படி என்ற புதிருக்கு, சிங்கள ஆளும் உயரடுக்கானது, கட்சி அடிப்படையிலான அனுசரணை முறைக்கு நிதியளிப்பதற்காக நிரந்தர உத்தரவாதமாக அரச நிறுவனங்களை அரசியல்மயப்படுத்தல் என்ற வழியைக் கண்டுபிடித்தது.

அரச நிறுவனங்களின் செயல்பாட்டின் மீதான விமர்சனங்கள், அடிப்படை பொதுச் சேவைகளை வழங்குவதில் அவற்றின் திறமையின்மை, அவற்றின் கட்டுப்பாடற்ற விரிவாக்கம் மற்றும் பொது நிர்வாகத்தின் மிகப்பெரிய பராமரிப்பு செலவுகள் ஆகியவற்றை அடிக்கடி சுட்டிக்காட்டுகின்றன. அரசியல் மயமாக்கல் மற்றும் பரவலான அனுசரணை அரசியல் என்பது அரச நிறுவனங்கள் முழுவதும் கவலையளிக்கும் வளர்ச்சியாக உள்ளது. அரச நிறுவனங்களில் அனுசரணை அரசியல் பற்றிய இன்னொரு முக்கியமான பரிமாணம், நிறுவனங்களின் அரசியல் மயமாதலுக்கும், இன மோதல்கள் மற்றும் உள்நாட்டுப் போருக்கும் இடையிலான தொடர்பாகும். அரச நிறுவனங்களில் வேரூன்றிய அனுசரணை அரசியல் இனவாதமாகவும் சிறுபான்மையினருக்கான பொதுச்சேவை வழங்கலில் பாரபட்சமாகவும் வெளிப்பட்டது.

## கடிதங்கள்

### வீதியை செப்பனிட்டு தரவும்

பொத்துவில் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட றொட்டை மீள் குடியேற்றக் கிராமத்திற்குச் செல்லும் பிரதான வீதியைச் செப்பனிட்டுத் தருமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் குறித்த கிராமத்தில், ஜப்பான் நாட்டின் 'ஜெய்க்கா' நிறுவனத்தினால் இந்த வீடுகள் அமைக்கப்பட்டு, இம்மக்களின் போக்குவரத்திற்காக வீதிகளும் அமைக்கப்பட்டுக் கடந்த 2006இல் மக்கள் மீள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

குடியேற்றப்பட்டதிலிருந்து கடந்த 10 வருடத்திற்கும் மேலாகக் குறித்த வீதியானது உடைந்து சேதமடைந்து குண்டும் குழியுமாகக் காணப்படுவதால் பாடசாலை மாணவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் வயோதிபர்கள் விவசாயிகள் மற்றும் பொது மக்களின் போக்குவரத்து மிகவும் பாதிக்கப்பட்டு பெரும் துன்பங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

றொட்டை மீள் குடியேற்றக் கிராமத்தில் 347 குடும்பங்கள் வாழ்ந்து வருவதோடு, றொட்டை, 'ஜெய்க்கா' ஆகிய கிராமங்களுக்கு மற்றும் தாரம்பளை விவசாயக் காணிகளுக்குச் செல்லும் விவசாயிகள் தமது அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகக் குறித்த வீதியைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இதேவேளை, தேர்தல் காலங்களில் இம்மக்களின் அடிப்படைத் தேவைகளை முன் வைத்து அரசியல் செய்யும் மக்கள் பிரதிநிதிகள் தேர்தல் முடிந்த பின் இம்மக்களையும் இக் கிராமத்தையும் கைவிடுவதாகச் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ்வாறு கவனிப்பாரற்று ஒதுக்கப்பட்டு வாழும் இந்த மக்களின் நன்மை போக்குவரத்திற்காக குறித்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

– எம்.எஸ்.எம்.ஹனீபா

# சல்லாபம்



உலர்ந்து
கொண்டிருக்கிறது
பெருங்காடு...

மழை
குளிர்
பனி
வெப்பம்
அத்தனையும்
கடந்த
துறவறம்...

மழையை
மறுத்து விட்டு
மரத்தை
நேசிப்பது
சடலத்துடன்
கொள்ளும்
சல்லாபம்...

கானல்
மேகத்திடம்
சாரல்
வேண்டி
நிற்கும்
மண்
எனவாகிறது
குடிமகன்
நெஞ்சம்...



– சிட்டு

# காகிதம் தானே





வெற்றுக் காகிதமாய்
உள்ளவரை
வெறிச்சோடித்
தான் கிடந்தது
அதன் வாழ்வும்...

வர்ணமையூற்றி
நாட்டுச் சின்னமும் பொறித்து
சில அடையாளங்களும்
பொறித்து
மதிப்பீட்டு
இலக்கமும்
பொறித்து
அச்சிட்ட நாள் முதல்
அதுவே தேவதை உலா
எத்தனை கொண்டாட்டம்
எவ்வளவு மதிப்பு
எண்ணற்ற பயணம்
பலகைகளாற் பரிமாற்றம்
பலவயிற்றுப் பசியாற்றல்
பல நோய்கு மருந்து
என்றும்

சிலர்
பண்பிழந்து பரிதவித்தும்
கண்ணிழந்து களியாடியும்
வெண்ணுள்ளந் தான்
மறந்தும்
மானிடர் என மறந்தும்
கானக மிருகமாயும்
ஏனிந்நமாற்றமென
ஏழனமாய் நோக்க வைத்தும்
எழில் வாழ்வைச் சிதைக்கும்
கோலம்

கட்டாய்ச் சேர்த்து வர
காலமும் கூடி வர
உடல் சுருங்கி
உள்ளுணர்வு வெள்ளையாக

வெற்றுக் காகிதம் தான்
வெறியாட்டம் போட
வைத்ததென்றும்
கற்றுத் தேறிடக்
காலமும் சிரிக்கும்
வேடிக்கை உலகின்
பணத்தின் வேடிக்கை
கண்டு

– குகதா

# குருவி



வெப்பம் விடும் பூமி
அனல் கக்கும் காற்று
முகத்தைச்
சுழித்துக்கொண்டமரங்கள்
மத்திமத்தில் வந்துநின்று
மொத்தசக்தியையும்
குருவிக்குஅளிக்கும் ஞாயிறு

அந்தோ...

அந்த வேகும்
வெட்டையில்
சிறகிழந்த சிறு குருவி
என்னதான்
செய்யும்?
நெஞ்சம் பதைக்கிறது
கால்கள் துடிக்கின்றன
கரங்கள் அடிக்கின்றன
நிலம் விடுவதாய்
இல்லை
இறுகப் பற்றிக்கொண்டது
குருவியை

திடீரென
ஒரு அடர்ந்த நிழல்
மகிழ்ச்சியில் கூச்சல்
இடுகிறது குருவி
வழியும் அருவியில்
குளித்தது போல ஒரு சுகம்
நிழல் விரிந்தது
கணப் பொழுதில்
சுருங்கியும் விட்டது

நிழல் தந்து ஆனந்தம்
தந்தது
ஆண்டவன் அல்ல
இன்னுமொரு ஆபத்து
வந்த கழுகிற்கு
இரையாகிப் போனது
சிறுகுருவி.



–தமிழ்க்கீரன்
கல்மடு, கல்குடா

இலங்கையில் 10 பயிலல் நிலையங்களின் ஆரம்பித்து

# புதிய மைல்கல்லை எய்தியுள்ளது SSG செயற்திட்டம்



நிலைபேறான வளர்ச்சிக்கான திறன்கள் (SSG) செயற்திட்டம், ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் ஆறு புதிய பயிலல் நிலையங்களை ஆரம்பித்து மற்றுமொரு முக்கியமான மைல்கல்லை எய்தியுள்ளது. இந்த நிலையங்கள், களுத்துறை மாவட்டத்தின் புளத்சிங்கள, கம்பஹா மாவட்டத்தின் கட்டுநாயக்க, கொழும்பு மாவட்டத்தின் ராஜகிரிய, மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை, திருகோணமலை மாவட்டத்தின் குச்சாவெளி மற்றும் அம்பாறை மாவட்டத்தின் அம்பாறை ஆகிய பகுதிகளில் நிறுவப்பட்டுள்ளன. ஏற்கெனவே நான்கு நிலையங்கள், கண்டி மாவட்டத்தின் செங்கடகல, மாத்தளை மாவட்டத்தின் நாவுல, நுவரெலியா மாவட்டத்தின் மீபிலிமான மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் வீரவில பகுதிகளில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த விரிவாக்கத்துடன், இலங்கையில் 10 மாவட்டங்களுக்கு SSG தனது இளைஞர் விருத்தி செயற்பாடுகளை விஸ்தரித்துள்ளது. அதனூடாக, நாட்டில் காணப்படும் மாபெரும் விருந்தோம்பல் கற்கைகள் நிலையங்களில் ஒன்றாக திகழ்கின்றது. குறைந்த வசதிகள் படைத்த இளைஞர்களுக்கு இன, மத, பாலின பாகுபாடின்றி சமமான வாய்ப்புகளை பெற்றுக் கொடுக்கின்றது. அண்மைய புள்ளிவிவரங்களின் பிரகாரம், 600க்கும் அதிகமான மாணவர்கள் தம்மை பதிவு செய்து கொண்டுள்ளதுடன், தற்போது பயிற்சிகளைப் பெறுகின்றனர். 2024இன் இறுதியில் மேலும் 970 மாணவர்களை உள்வாங்கி பயிற்சியளிப்பதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இதில், புதிய நிலையங்களை ஆரம்பிப்பதற்கான திட்டங்களும் அடங்கியுள்ளன. 2025இற்கான இலக்கானது, சகல 10 நிலையங்களிலும் 1,830 மாணவர்களை பதிவு செய்வதாகும்.

நிலையங்களின் பிந்திய தரவுகளின் பிரகாரம், நுவரெலியா SSG ஐச் சேர்ந்த முதல் தொகுதி மாணவர்கள், செப்டெம்பர் மாதத்தில் தமது ஐந்து மாத தொழிற்பயிற்சியை பூர்த்தி செய்யவுள்ளனர். இந்த மாணவர்கள், புகழ்பெற்ற ஹோட்டல்களான Grand Hotel, Hill Club, Seven Heaven, Landale, மற்றும் Oliphant Bungalow by Amaya போன்றவற்றில் தமக்கான நிலைகளை பெற்றுள்ளனர். அதேவேளை, கண்டி நிலையத்தின் இரண்டாம் தொகுதியைச் சேர்ந்தவர்கள் தமது நான்கு மாத கோட்பாட்டு கற்கையை ஜூலை மாதத்தில் பூர்த்தி செய்திருந்ததுடன், Grand Kandyan, Mahaweli Reach, Cinnamon Citadel, Casamara Hotel, மற்றும் Heritance Tea Factory போன்றவற்றுக்கு கொடுப்பனவுகளுடனான தொழிற்பயிற்சிக்கு தெரிவாகியுள்ளனர்.

அதுபோன்று, நாவுல நிலையத்தின் இரண்டாம் தொகுதியினர், Hunas Falls, Cinnamon Citadel, Sigiri Village, Jetwing Lake, Occidental Paradise, Hikka Tranz, Devon Rest, மற்றும் Mahaweli Reach போன்ற ஹோட்டல்களில் கொடுப்பனவுகளுடனான தொழிற்பயிற்சியில் இணைந்துள்ளனர். வீரவில நிலையத்தின் முதல் தொகுதி மாணவர்கள் தமது நான்கு மாத கால வகுப்பறை கோட்பாட்டு கற்கையை பூர்த்தி செய்து, Shangri-La Hambantota, Laya Safari, Thaulle Ayurvedic Resort, Rice of Life by Tissa Inn, Tamarind Tree Tissamaharama, மற்றும் Cinnamon Wild Yala ஆகிய ஹோட்டல்களில் தொழிற்பயிற்சியை ஆரம்பித்துள்ளனர்.

SSG செயற்திட்டம், விருந்தோம்பல் துறையில் தொழில்நுட்ப அறிவை பெற்றுக் கொடுப்பது மாத்திரமன்றி, பிரயோக திறன்களை மேம்படுத்துவது, நிஜ உலக அனுபவத்தைப் பெற்றுக் கொடுப்பது மற்றும் மென் திறன் விருத்தி ஆகியவற்றில் கவனம் செலுத்துவதாகவும் அமைந்துள்ளது. விருந்தோம்பல் தொழிற்துறையில் மாணவர்களுக்கு சிறப்பாக செயலாற்றுவதற்கு இவை முக்கியமானவை என்பதில் SSG நம்பிக்கை கொண்டுள்ளது. ஒவ்வொரு நிலையமும் நியமமான கல்விசார் நாட்காட்டியை பின்தொடர்வதுடன், மாணவர்களுக்கு தொழிற்துறை நிபுணர்கள் மற்றும் மென் திறன் பயிற்றுவிப்பாளர்களின் கீழ் பயிற்சிகளைப் பெறுவதற்கான வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதாக அமைந்திருக்கும். பாடவிதானத்தில் தலைமைத்துவம், தொடர்பாடல், பேச்சுவார்த்தைகள், குழுநிலை செயற்பாடுகள், புகழ்பெற்ற ஹோட்டல்களுக்கான கள விஜயங்கள், பொது முகாமையாளர்களால் விருந்தினர்களுக்கான உரைகள், நேர்காணல் தயார்ப்படுத்தல் அமர்வுகள், விருந்தோம்பல் மாதிரி செயற்பாடுகள், பொதுப் பேச்சு மற்றும் சுயவிவரக்கோவை கட்டியெழுப்பல் அமர்வுகள் போன்றன அடங்கியிருக்கும்.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான பங்காளர்களான தேசிய இளைஞர் சேவைகள் நிலையங்கள் மற்றும் ஹோட்டல் சம்மேளனங்களுடன் SSG இணைந்து, மேலும் பல கல்விசார் செயற்பாடுகளை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளது. இதனூடாக, மாணவர்களுக்கு சுயநம்பிக்கையுடன் அவசியமான அறிவு மற்றும் திறன்களை பயன்படுத்தி பணிகளை மேற்கொள்வதற்கு உதவியாக அமைந்திருக்கும். இறுதியாக, உள்நாட்டிலும், சர்வதேச மட்டத்திலும் உலகத் தரம் வாய்ந்த தொழில் வாய்ப்புகளை பெற்றுக் கொள்வதிலும் உதவியாக இருக்கும்.

சுவிஸ் ஹோட்டல் முகாமைத்துவ கல்வியகத்துடன்

# Cinnamon Hotels & Resorts கைகோர்ப்பு

சுவிஸ் ஹோட்டல் மனேஜ்மன்ட் அகடமியுடன் (SHMA), Cinnamon Hotels & Resorts கைகோர்த்து, Cinnamon Hospitality Academy அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. உலகத் தரம் வாய்ந்த சுவிஸ் விருந்தோம்பல் கல்வியை தொழிற்பயிற்சி கல்வி மற்றும் பயிற்சியினூடாக (VET),Ecole hôtelière de Lausanne (EHL) நிபுணத்துவ டிப்ளோமாவை இலங்கையில் பெற்றுக் கொடுத்து, இலங்கையில் விருந்தோம்பல் கல்வியின் தரத்தை மேம்படுத்துவது இந்த கைகோர்ப்பின் இலக்காக அமைந்துள்ளது.

Cinnamon Hospitality Academy இல் இணைந்து கொள்ளும் மாணவர்களுக்கு சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட EHL தகைமையை பெற்றுக் கொள்வதற்கான பிரத்தியேக வாய்ப்பை வழங்குவதாக அமைந்துள்ளது. உலகின் முதல் தர விருந்தோம்பல் முகாமைத்துவ பல்கலைக்கழகமாக EHL தரப்படுத்தப்பட்டுள்ளது. சுவிஸ் ஆற்றல் கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்ட EHL பாடவிதானம், உயர் தகைமை வாய்ந்த நிபுணர்களை தயார்ப்படுத்துவதில் புகழ்பெற்றுள்ளதுடன், தொழிற்துறை தொடர்பான பிரயோக திறன்கள் மற்றும் ஆழமான புரிதல்கள் ஆகியவற்றை வழங்கும் வகையில் அமைந்துள்ளது.

18 மாத முழுநேர நிபுணத்துவ டிப்ளோமா கற்கைநெறியான EHL இன் VET கற்கை அமைந்திருப்பதுடன், ஒரு வருட கால தொழிற்பயிற்சி அனுபவத்தை வழங்கி, மொத்தமாக இரண்டரை வருட கால அனுபவத்தை பெற்றுக் கொடுப்பதாக அமைந்துள்ளது. பாடவிதானம் நிஜ உலக அனுபவத்தை இணைத்து, பிரயோக முகாமைத்துவ தொழில்நுட்பங்கள் மற்றும் கல்விசார் அடிப்படைகளை வழங்கி, மூன்று விசேடத்துவ வழிகளான Culinary, F&B Service மற்றும் Hotel Operations



ஆகியவற்றை வழங்குகின்றது. இந்த கற்கை மாதிரியில் இரு நாள் பிரயோக மற்றும் கோட்பாட்டு ரீதியான பயிற்சிகள் வழங்கப்படுவதுடன், நான்கு நாட்கள் தொழில்சார் பயிற்சி Cinnamon Hotels & Resorts Colombo hotels இல் வழங்கப்படும்.

Cinnamon Hotels & Resorts மற்றும் A. Baur & Co. Pvt Ltd (பவர்) இன் துணை நிறுவனமான SHMA உடனான பங்காண்மை இலங்கையின் விருந்தோம்பல் துறைக்கு மிகவும் முக்கியமானது. ஏ.பவர் அன்ட் கம்பனி பிரதம நிறைவேற்று அதிகாரி/முகாமைத்துவ பணிப்பாளர் ரொல்ஃப் பிளாசர் கருத்துத் தெரிவிக்கையில், "Cinnamon Hotels & Resorts உடன் இணைந்து, உலகின் முதல்தர கல்விச் சேவைகள் வழங்குநரான EHL இன் VET கற்கையை வழங்க முன்வந்துள்ளதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். நாட்டின் விருந்தோம்பல் கல்வித் துறையில் இது மாபெரும் முன்னேற்றமாக அமைந்துள்ளது. உயர் திறன் படைத்த நிபுணர்களை உருவாக்குவதற்கு வழிகோலுவதாக அமைந்துள்ளது" என்றார்.

Cinnamon Hotels & Resorts இன் பிரதம நிறைவேற்று அதிகாரி மிக்கெல் ஸ்வென்சன் கருத்துத் தெரிவிக்கையில், "இந்தப் பங்காண்மை Cinnamon Hotels & Resorts க்கு மாத்திரம் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திராமல், இலங்கையின் விருந்தோம்பல் துறைக்கும் முக்கியமானதாக அமைந்துள்ளது. குறிப்பாக இந்தத் துறை மீட்சியடைந்து வரும் வகையில் மிகவும் முக்கியமானதாக அமைந்துள்ளது. இலங்கையின் முன்னணி விருந்தோம்பல் வர்த்தக நாமம் எனும் வகையில் நாம் SHMA உடனான கைகோர்ப்பினூடாக அங்கீகாரம் பெற்ற EHLகற்கைகளை வழங்க முன்வந்துள்ளோம். உலகின் முதல் தர விருந்தோம்பல் முகாமைத்துவ கல்வியகத்தின் கற்கைகளுடன் கைகோர்த்துள்ளமையானது, இலங்கையின் விருந்தோம்பல் கல்வியை முன்நோக்கி கொண்டு செல்வதற்கான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ளது. The Cinnamon Hospitality Academy என்பது திறன் இடைவெளியை நிவர்த்தி செய்வது மட்டுமன்றி, கல்வி மற்றும் பயிற்சியில் புதிய எடுத்துக்காட்டாக அமைந்திருக்கும் என்பதுடன், இளம் மற்றும் அனுபவம் வாய்ந்த நிபுணர்களை நாட்டிலிருந்து வெளியேறாமல் வலுவூட்டும் வகையில் அமைந்திருக்கும். 'Learn, Work & Earn' மாதிரியினூடாக, உற்பத்தித்திறன் இழப்பை குறைப்பதுடன், சேவைச் சிறப்பை பேணவும் ஏதுவாக அமைந்திருக்கும்" என்றார்.

EHL இன் (தெற்காசியா, மியன்மார் மற்றும் மத்திய கிழக்கு) பிராந்திய தலைமை அதிகாரியும் பணிப்பாளருமான அமான் ஆதித்யா சச்தேவ் கருத்துத் தெரிவிக்கையில், "Cinnamon Hotels & Resorts மற்றும் SHMA இடையிலான கைகோர்த்து, கொழும்பில் Cinnamon Hospitality Academy ஐ நிறுவி, அதனூடாக உலகத் தரம் வாய்ந்த EHL இன் VET கற்கைகளை வழங்க முன்வந்துள்ளதை அவதானிப்பதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். உலகப் புகழ்பெற்ற சுவிஸ் ஆற்றல் கட்டமைப்பின் அடிப்படையில், இந்தக் கற்கைகளினூடாக, சர்வதேச விருந்தோம்பல் துறையில் நிலைத்திருப்புக்கு அவசியமான அறிவு, ஆற்றல் மற்றும் மனநிலையை பெற்றுக் கொள்ள முடியும். தற்போது இந்த கற்கைகள் 17 நாடுகளில் வழங்கப்படுகின்றன" என்றார்.

# UNEVAN JUSTICE

கனிஸ்ரா ஜெயகாந்தன்,
ஊடகக் கற்கைகள் துறை மாணவி,
மூன்றாம் வருடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.




ராஜ் ராஜரட்ணம் அவர்களால் (Unevan Justice) என்னும் தலைப்பில் 2021ஆம் ஆங்கிலத்தில் வெளியாகி மக்கள் மத்தியில் மிகுந்த கவனத்தினை பெற்றமையை அடுத்து தமிழ்மொழியில் சமனற்ற நீதி அமெரிக்க நீதித்துறையின் சதியும் எனது போராட்டமும் என்னும் பெயரில் பேரருட்கலாநிதி எஸ்.ஜெபநேசன், முனைவர் சோ.பத்மநாதனால் மொழிபெயர்க்கப்பட்டு 2024ஆம் ஆண்டு முதற்பதிப்பிற்கு உட்படுத்தப்பட்ட 336 பக்கங்களை கொண்ட இந்த நூலானது சமனற்ற நீதிமுறைமை காரணமாக உலகம் முழுவதுமுள்ள சிறைச்சாலைகளில் நியாயமற்றமுறையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் அனைவருக்குமான நூலாக அமையப்பெறுகின்றது.

இந்த நூல் முழுவதுமாக உலக வல்லரசாகிய அமெரிக்க நீதித்துறையின் காணப்படுகின்ற ஊழல்களையும், குறைபாடுகளையும், பக்கச்சார்புத் தன்மையையும் எடுத்துக்காட்டுகின்ற நூலாகவே திகழ்கின்றது. அமெரிக்காவில் தலைமையகத்தினை கொண்டிருந்த ‘கலியன் குழுமம்’ என்னும் உலக புகழ்பெற்ற முதலீட்டு நிதியத்தின் நிறுவுனராகவும, தலைவராகவும் செயற்பட்டு வந்த ராஜ் ராஜரட்ணம் 2009ஆம் ஆண்டு உட்தகவல் வணிக குற்றத்திற்காய் கைது செய்யப்பட்டுப் பல விசாரணைகள், அழுத்தங்கள், நெருக்கடிகள் போன்றவற்றிற்குள்ளாகி தன் மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் அனைத்தும் பொய் குற்றச்சாட்டுக்கள் என்பதில் உறுதியாக நின்று இறுதிவரை அமெரிக்க அரசிற்கு எதிராகப் போராடி நீதிமன்றம் தனக்கான நீதியை வழங்கும் என நம்பியிருந்தாலும், ராஜ் ராஜரட்ணம் அவர்களுக்கு அமெரிக்க நீதித்துறையின் பொய்களும், பொய் சாட்சிகளும் இணைந்து உண்மையை மறைத்து பதினொரு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்த போது அவர் சிறையிலிருந்த காலத்தில் அவருடைய கைகளால் ஆரம்பத்தில் ஒருமணிநேரமும் பின்னர் மூன்று மணிநேரமும் செலவிடப்பட்டு எழுதிய புத்தகமாகவே இந்த புத்தகம் அமையப்பெறுகின்றது.

இதுவரைக்கும் நான் நிறையப் புத்தகங்களை வாசித்திருக்கின்றேன், ஆனால் இந்த புத்தகத்தினை வாசிக்கும் போது எனக்கு அடுத்தாக என்ன நடக்கப்போகின்றது, ராஜ் ராஜரட்ணம் என்ன செய்யப்போகின்றார், ஊடகங்கள் ஏன் அவரை இப்படியாகச் சித்திரிக்கின்றன, அனைவரும் இணைந்த ஒரு தனிப்பட்ட நபருக்கு எதிராக ஏன் இப்படி பொய் குற்றம் சுமத்த வேண்டும், எப்படியாக நீதி வழங்கப்படப்போகின்றது, சரியான உண்மையை வெளிக்கொணரப்படுமா, கலியன் குழுமத்திற்கு அடுத்து என்ன நிகழப்போகின்றது, ராஜ் ராஜரட்ணம் அவர்கள் சிறையிலிருந்து விடுவிக்கப்படுவாரா? என்ற கேள்விகளே என்னை இந்த புத்தகம் முழுவதுமாக படிக்க வைத்தது. இவருடைய எழுத்துக்களின் அந்த அளவிற்கு ஆழமும், ஆத்மார்த்தமான உயிரோட்டமும், உண்மைக்கான தேடலும் காணப்பட்டன. அவை என்னையும் அவர் அனுபவித்த சூழலிற்கே அழைத்துச் சென்று கண்ணால் நேரடியாகப் பார்ப்பதனை போன்ற மனநிலையினை எனக்கு ஏற்படுத்தியிருந்தது.

ராஜ் ராஜரட்ணம் அவர்களின் குழந்தைப் பருவம், இலங்கையில் அவர் வாழ்ந்த காலத்திலிருந்த நிலைமை, பெற்றோர் அவரை வளர்த்த விதம், கல்விக்காக அனுபவித்த துன்பகரமான சூழல், தாயாரின் கடிதத்திற்காய் காத்திருந்த வார இறுதி நாட்கள், தந்தையின் வார்த்தைகளுக்கு அவர் கொண்டிருந்த நம்பிக்கை, கல்வி மீதான தணியாத தாகம், தொழில் ரீதியாக அவர் அடைந்த வெற்றிகள், வளர்ச்சிகள், தோல்விகள், பங்குச்சந்தை தொடர்பாக அவர் கொண்டிருந்த ஆர்வம் மற்றும் அறிவு, அவருடைய வாழ்க்கையில் ஏற்பட்ட நம்பிக்குத் துரோகம், வழக்கு விசாரணைகள், பொய் சாட்சிகள் சோடிக்கப்பட்ட விதம், இறுதிவரை நேரடியாக அமெரிக்க நீதிமன்றத்திற்கு எதிராகப் போராடிய விதம், இறுதியாக தன்னுடைய பிள்ளைகள் தன் மேல் கொண்டிருந்த நம்பிக்கை போன்றவற்றின் ஊடாக பயணிக்கும் அவர், நாம் எந்தவிடயமாக இருந்தாலும் விடாமுயற்சியுடன், தெளிந்த சிந்தனையுடனும் பயணிக்க வேண்டும் என்பதனை இப்புத்தகத்தின் ஊடாக எமக்கு விட்டுச் செல்ல முனைகின்றார்.

கறுப்பு அன்னம் என தொடங்கும் முதலாம் இயலானது அவர் கைது செய்யப்பட்டமையை கூறுவதோடு ஆரம்பமாகின்றது. இந்த புத்தகத்தில் காணப்படும் 21 இயல்களின் ஊடாகவும் தன்னை துணிச்சலான மனிதனாகச் சித்திரித்துக் காட்டுவதுடன் மாத்திரம் நின்றுவிடாது, தனக்கு ஏற்பட்ட மறுப்புக்கள், பாரபட்சங்கள், அநீதிகள், பொய் குற்றச்சாட்டுகளை தமது சுய இலாபத்திற்காக ராஜ் ராஜரட்ணம் மீது துரோகம் மேற்கொண்ட நபர்களையும் தனது வாழ்க்கையில் மறக்க முடியாத நபர்களையும், நிகழ்வுகளையும் ஒவ்வொரு இயலின் ஊடாகவும் இணைத்து மிகவும் சுவாரஸ்யமாகப் பேசியுள்ளார்.

புத்தகத்தின் ஆரம்ப ஒருசில பக்கங்களினை வாசித்த பின்பு இந்த புத்தகத்தினை எவ்வளவு சீக்கிரம் வாசிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் வாசித்து ராஜ் ராஜரட்ணம் விடுவிக்கப்பட்டாரா? இல்லையா? ஏன அறிந்து தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது.

அரச தரப்பு வழக்குரைஞர்களின் மிரட்டல்கள் பயங்கரமானவை. அவை நண்பர்களையும் எதிரியாக்குகின்றன. குடும்ப அங்கத்தவர்களையும் அரசுத் தரப்புச் சாட்சிகளாக்குகின்றன. ஊழியர்களை மலம் தின்னும் புறாக்களாக்குகின்றன. மிகத்துல்லியான புள்ளி விபரங்களின்படி, குற்றம் சுமத்தப்பட்டவர்களில் 97 வீதம் வீதமானோர் தாங்கள் குற்றவாளிகளே என்று மன்றாடி, எதிர் வழக்காடாமல் பணிந்து போய், குறைந்தபட்சத் தண்டனையை ஏற்றுக்கொள்ளுகின்றனர். அவ்வாறு பணிந்து போகாதவர்களில் நானும் ஒருவன. செய்யாத குற்றத்தை ஒப்புக்கொண்டு “நானே குற்றவாளி” என்று மன்றாட நான் தயாரில்லை. எத்தனை இடர்கள் வந்தாலும் அநீதியின் முன்னே நான் ஒருபோதும் மண்டியிடப்போவதில்லை. இவ்வாறான ஆணித்தரமான வார்த்தைகள் எம்முடைய வாழ்க்கைக்கும் சவால் விடுக்கும் செய்தியாகவே அமையப்பெறுகின்றது.

அமெரிக்க வரலாற்றில் உச்சபட்ட அபராத தொகையும், பதினொரு வருடங்கள் செய்யாத குற்றத்திற்காகச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, ஏழரை வருடங்கள் சிறைத் தண்டனை அனுபவித்த பின்னர் விடுவிக்கப்பட்ட ராஜ் ராஜரட்ணம் அவர்கள், மீண்டும் தனது கலியன் நிறுவனத்தினை கட்டியெழுப்ப, அவருடைய பாதையில் தொடர்ந்து பயணிக்க அவரிடம் காணப்பட்ட துணிவே பக்கபலமாக அமையப்பெற்றது.

அமெரிக்க நீதித்துறை, மற்றும் எப்.பி.ஐ. மேல் நாம் அனைவரும் கட்டமைத்துள்ள போலியான விம்பத்தினை இப்புத்தமும், இதில் எழுதப்பட்டுள்ள ஆதாரபூர்வமான உண்மைச் சம்பவங்கள் சிதறடிப்பதுடன், “இலட்சியவாதிகள் எப்போது வேண்டுமானாலும் இலக்கு வைக்கப்படலாம். அதிலும் நாம் அறியாத வகையில் நமக்கு முன் விரிக்கப்பட்டுள்ள வலைக்குள் சிக்கலாம்”. இவற்றிலிருந்து எம்மை எவ்வாறாகத் தற்காத்துக்கொள்ளவேண்டும் என்பதனை இந்தநூலின் ஒவ்வொரு வசனங்களின் ஊடாகவும் அழுத்தமாக வாசகர்களுக்கு கூறமுனைகின்றார்.

ஒரு புத்தகங்களையும் வாசித்த பின் சிறந்த வாசகருக்கு மனநிலையில் ஏதாவது மாற்றம் தோன்றுவது வழக்கம், அதுபோல இந்த புத்தகத்தினை வாசித்து முடித்த பின்பு உலக வல்லரசிற்கு எதிராகத் துணிச்சலுடன் போராடிய ராஜ் ராஜரட்ணம் அவர்களை ஒருமுறையாவது சந்தித்துவிடமாட்டேனா? என்ற ஏக்கமும், ராஜ் ராஜரட்ணம் அவர்கள் கொண்டிருந்த துணிவு, உண்மை, விடாமுயற்சிகளின் ஊடாக எனது வாழ்க்கைக்கான பயணப் பாதையைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற உணர்வினையும் தோற்றுவித்தது.

ராஜ் ராஜரட்ணம் அவர்களின் உணர்வுகளுக்கு உயிர்கொடுத்துள்ள இந்த புத்தகமானது சவால்களைக் கண்டு சளைத்து விடாமல், சாதனை நடைபோடத் துடித்துக்கொண்டிருக்கின்ற ஒவ்வொரு இளம் உள்ளங்களையும் தட்டியெழுப்பும் சாவியாகத் திகழ்கின்றது. நீங்களுக்கும் நேரம் கிடைக்கும் போது ஒருமுறையேனும் சமனற்ற நீதி என்ற இந்த புத்தகத்தினை வாசிப்பீர்களாக இருந்தால், ஒரு துணிச்சல்கரமான ஆளுமையாக மாறுவதுடன். அநீதிகளுக்கு அடிபணியாது துணிந்து நின்று, உங்கள் எதிர்கால வாழ்க்கையில் உங்களுக்காகக் காத்திருக்கின்ற பல சவால்களைத் தனியாகச் சமாளிக்கக் கற்றுக்கொள்வீர்கள் தேவையான பல படிப்பினைகளையும், தோல்விகளைக் கண்டு துவண்டுவிடாத மனப்பக்குவத்தினையும், துணிச்சல் உணர்வினையும் பெற்றுக் கொள்வீர்கள் என்பது எனது தனிப்பட்ட நம்பிக்கையாகும்.

# கொத்துவேலி

அபு அலா

கல்முனை - உவெஸ்லி உயர்தரப் பாடசாலை ‘76C’ நண்பர்கள் வட்டத்தினதும் கல்முனை வடக்கு கலாச்சாரப் பேரவையினதும் ஏற்பாட்டில் கிழக்கு மாகாண மீன்பிடிப் பணிப்பாளர் சி.சுதாகரன் (நீலையூர் சுதா)வின் ‘கொத்துவேலி’ கவிதை நூல் அறிமுக விழா கல்முனை இராமகிருஷ்ண மகா வித்தியாலய மண்டபத்தில் கடந்த மாதம் சனிக்கிழமை(24) இடம்பெற்றது.

உவெஸ்லி உயர்தரப் பாடசாலையின் முன்னாள் அதிபர் வடிவேல் பிரபாகரன் தலைமை இடம்பெற்ற இந்நூல் அறிமுக விழாவில், மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் உதவி பொது முகாமையாளர் சுவாமி சுரார்ச்சிதானந்தர் ஆன்மீக அதிதியாகவும், மேலதிக மாகாணப் பணிப்பாளரும் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருமாகிய கவிஞரும் எழுத்தாளருமான வைத்திய கலாநிதி இரா.முரளீஸ்வரன் முதன்மை அதிதியாகவும் கலந்து சிறப்பித்தனர்.

கௌரவ அதிதிகளாக அம்பாறை மாவட்ட மேலதிக மாவட்ட செயலாளர் எஸ்.ஜெகராஜன், பிரதேச செயலாளர்களான ரி.அதிசயராஜ், எஸ்.ராகுலநாயகி, ரி.கஜேந்திரன், ஆர்.திரவியராஜ், என்.நவநீதராஜா, எஸ்.எல்.எம்.ஹனீபா ஆகியோருடன் பிராந்திய திட்டமிடல் வைத்திய அதிகாரிகள், சட்டத்தரணிகள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.




“இந்நூல் அறிமுக விழாவுக்கு மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் உதவி பொது முகாமையாளர் சுவாமி சுரார்ச்சிதானந்தர் ஆன்மீக அதிதியாகவும், மேலதிக மாகாணப் பணிப்பாளரும் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருமாகிய கவிஞரும் எழுத்தாளருமான வைத்திய கலாநிதி இரா.முரளீஸ்வரனும் கலந்து சிறப்பித்தனர்




# நூல் வெளியீட்டு விழா



ஏ.எம்.கீத், ஏ.எச்.ஹஸ்பர்

பர்ஹான் முஸ்தபா எழுதிய ‘மரக்கல மீகாமன்’ ரொபர்ட் நொக்ஸின் வரலாற்று புனைகதை நூல் வெளியீட்டு விழா, மூதூர் பேர்ள் கிரேன்ட் மண்டபத்தில் நடுத்தீவு வலுவூட்டல் மற்றும் நலன்புரி சங்கத்தினால் ஞாயிற்றுக்கிழமை (01) வெளியீடு செய்யப்பட்டது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக கலாநிதி றவூப் ஸெய்ன் (PhD), மற்றும் நூல் திறனாய்வாளராக எழுத்தாளரும், ஆய்வாளருமான சிறாஜ் மஸ்ஹூர், அவர்களும் கலந்து சிறப்பித்ததோடு பெருந்திரளான வாசகர்ளும் விசேட அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வை அஷ்ஷேஹ் என்.சியாத் (நழீமி) தலைமை தாங்கியதோடு, வெளியீட்டு அமைப்பின் தலைவர் எஸ்.எம்.முஜீப் பங்கேற்று நேர முகாமைத்துவத்தின் அடிப்படையில் சிறந்த முறையில் வடிவமைத்து நெறிப்படுத்தி சிறப்பித்திருந்தார்.

சகோதரர் வீ.எம்.ஹசீன் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கியதோடு, நூலின் முதல் பிரதியினை நூலாசிரியரின் தாயார் சபியா உம்மா மற்றும் பாரியார் ஹிதாயா பர்ஹான் வழங்கி வைக்க, தொழிலதிபர் வைத்தியர் வை.ஜெஸ்மின் பெற்றுக் கொண்டார்கள்.

இந்நூல் மூதூர் JMI வெளியீட்டகத்தினால் பதிப்பு செய்யப்பட்டதோடு, JMI உரிமையாளர் ஆஷா பாலினால் நூலாசிரியரின் சார்பில் எழுத்தாளரின் மகள் எப்.ஹரீனா செரீனுக்கு முதல் அரையாண்டுக்கான சிறந்த நாவலுக்கான விருதும் வழங்கி வைக்கப்பட்டது.

நைஜீரியா

'போக்கோ ஹராம்' தாக்குதலுக்கு

# நைஜீரியாவில் 100 பேர் பலி



நைஜீரியாவில் போகோ ஹராம் அமைப்பினர் நடத்திய தாக்குதலில் 100க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர்.

இது குறித்து அதிகாரிகள் கூறுகையில், "வடகிழக்கு மாகாணமான யோப், தார்முவா கவுன்சில் பகுதிக்கு மோட்டார் சைக்கிள்களில் வந்த 50க்கும் மேற்பட்ட போக்கோ ஹராம் அமைப்பினர், அங்கிருந்தவர்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர். பின்னர் அங்குள்ள கட்டடங்களுக்கு அவர்கள் தீவைத்தர். இதில் 100க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர்" என்று தெரிவித்தனர்.

மேற்கு ஆபிரிக்க பிராந்தியத்தில் தீவிர மதவாதச் சட்டங்களை அமுல்படுத்த வலியுறுத்தி போக்கோ ஹராம் அமைப்பு கடந்த 2009ஆம் ஆண்டு முதல் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகிறது.

அவர்கள் நடத்திய தாக்குதல்களில் இதுவரை 35,000 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 20 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் தங்கள் இருப்பிடங்களைவிட்டு வெளியேறி தவித்து வருவதாகவும் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

பெரு

மரம் வெட்ட வந்தவர்கள்

# அம்பு எய்து கொலை




பெருவின் அமேசானில் வாழும் 'மாஷ்கோ பைரோ' பழங்குடியினர் தங்கள் நிலத்தை ஆக்கிரமித்ததாகக் கூறி இரண்டு மரம் வெட்டுபவர்களை அம்பு எய்து கொலை செய்தனர்.

தென் அமெரிக்காவின் பெரு பகுதியில் இருக்கும் அமேசான் காட்டில் 'மாஷ்கோ பைரோ' என்ற பழங்குடியின மக்கள் வாழ்ந்து வருகின்றனர். வெளியுலக மக்களுடன் தொடர்பு இல்லாத அவர்கள்,

மரம் வெட்டுவதற்கு வந்த நபர்களை தனது அம்பால், வில் எய்து கொன்றுள்ளனர். அவர்களின் நிலத்தை மரம் வெட்டும் நபர்கள் ஆக்கிரமித்ததாக கூறியே கொன்றுள்ளனர்.

உத்தரபிரதேசம்



# சிறுமிக்கு பாலியல் துன்புறுத்தல்

## பாடசாலை ஊழியர் கைது

உத்தரபிரதேசத்தில் தனியார் பாடசாலையில் கற்கும் 6 வயது சிறுமியை, பாலியல் ரீதியாக துன்புறுத்திய பாடசாலை ஊழியர் கைது செய்யப்பட்டார்.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் தொல்லை அதிகரித்து வரும் நிலையில், இந்த சம்பவங்களில் ஈடுபடும் குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்து வருகிறது.

குறிப்பாக, மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, பாலியல் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிக்கும் வகையில் சட்ட திருத்தம் கொண்டு வரப்படும் என அறிவித்துள்ளார்.

இந்த நிலையில், உத்தரபிரதேசத்தில் தனியார் பாடசாலை ஒன்றில் 6 வயது சிறுமி பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதுபற்றி மேலும் தெரியவருகையில், கடந்த 03ஆம் திகதி வழக்கம் போல பாடசாலைக்கு சென்ற குறித்த சிறுமி, மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்துள்ளார்.

அப்போது, பாடசாலையின் ஊழியர் ஒருவர் சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். பயந்து போன சிறுமி இது தொடர்பாக தனது பெற்றோருக்கு தகவல் கூறியுள்ளார். அதன்பேரில், பொலிஸில் புகார் அளிக்கப்பட்டது.

புகாரைப் பெற்றுக் கொண்ட பொலிஸார், சம்பந்தப்பட்ட நபரை கைது செய்தனர்.

மேலும், இந்த விவகாரம் குறித்து சிறுமி, பாடசாலை நிர்வாகத்திடம் தெரிவித்த போதும், எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று பெற்றோர்கள் குற்றம்சாட்டியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொல்கத்தா




கொல்கத்தா பெண் மருத்துவர் குடும்பத்துக்கு

# இலஞ்சம் தர முயற்சி

கொல்கத்தா மருத்துவமனையில் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட பெண் மருத்துவரின் குடும்பத்தினர், "இலஞ்சம் கொடுத்து வழக்கை மூடி மறைக்க முயற்சி செய்தனர்" என பொலிஸார் மீது குற்றம் சாட்டியுள்ளனர்.

மேற்கு வங்கத்தின் கொல்கத்தாவில், ஆர்.ஜி.கர் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில், முதுநிலை இரண்டாம் ஆண்டு படித்த 31 வயது பயிற்சி பெண் மருத்துவர், பலாத்காரம் செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டார்.

இவரின் மரணத்துக்கு நீதி கேட்டு, நாடு முழுவதும் மருத்துவர்கள் போராட்டம் நடத்தினர். இன்று வரை மேற்கு வங்கத்தில் இது தொடர்பான கொந்தளிப்பு அடங்கவில்லை.

இந்நிலையில், "இலஞ்சம் கொடுத்து வழக்கை பொலிஸார் மூடி மறைக்க முயற்சி செய்தனர்" என பெண் மருத்துவர் குடும்பத்தினர் குற்றஞ்சாட்டினர்.

அவர்கள் கூறியதாவது, "உடலை அவசரமாக தகனம் செய்ய வலியுறுத்தினர். இலஞ்சம் கொடுத்து வழக்கை பொலிஸார் மூடி மறைக்க முயற்சி செய்தனர். பொலிஸ் அதிகாரியிடம் இருந்து இலஞ்சம் வாங்க மறுத்துவிட்டோம் என்றனர்.

புதுடில்லி

உலகின் முதலாவது

# திருவள்ளுவர் கலாசார மையம்



உலகின் முதலாவது திருவள்ளுவர் கலாசார மையம் சிங்கப்பூரில் அமைக்கப்படும் என்று இந்தியப் பிரதமர் மோடி அறிவித்துள்ளார்.

இதற்கு பல்வேறு தரப்பினர் மத்தியில் வரவேற்பும், பாராட்டும் குவிந்து வருகிறது.

திருக்குறளின் பெருமையை உலகம் முழுவதும் பரப்பும் வகையில், திருவள்ளுவர் கலாசார மையங்கள் அமைக்கப்படும் என்று பிரதமர் மோடி, தேர்தல் வாக்குறுதியில் அறிவித்திருந்தார்.

அதன்படி தற்போது அரசு முறை பயணமாக சிங்கப்பூர் சென்றுள்ள அவர், அந்நாட்டு பிரதமர் லோரன்ஸ் வோங்கிடம், முதலாவது திருவள்ளுவர் கலாசார மையத்தை சிங்கப்பூரில் அமைப்பதாக தெரிவித்துள்ளார்.

இந்த மையம் மூலம், திருக்குறள் சிறப்பு, தமிழ் மொழியின் இலக்கிய வளம், கலாசார சிறப்புகள் குறித்து வெளிப்படுத்தும் வகையில் நிகழ்வுகள் நடத்தப்பட உள்ளன.

இன்று ஆரம்பிக்கிறது மூன்றாவது டெஸ்ட்:

# ஆறுதல் வெற்றி பெறுமா இலங்கை?



இலங்கை, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டியானது ஓவலில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பிக்கிறது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளிலும் ஏற்கெனவே தோற்றுள்ள இலங்கை, இப்போட்டியில் ஆறுதல் வெற்றியைப் பெற்றுக் கொள்வதற்கு துடுப்பாட்டத்தில் பாரியளவு முன்னேறத்தைக் காண்பிக்க வேண்டியுள்ளது.

குறிப்பாக திமுத் கருணாரத்ன, அஞ்சலோ மத்தியூஸ், தினேஷ் சந்திமால் உள்ளிட்டோரிடமிருந்து பெரிய இனிங்ஸ்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

தவிர தொடரில் இலங்கையின் சிறந்த துடுப்பாட்டவீரராகக் காணப்படும் கமிந்து மெண்டிஸை முன்வரிசையில் ஆட வைக்க வேண்டுமென்ற குரல்களும் காணப்படுகின்றன.

இலங்கையணியில் மாற்றமிருக்காதென்று கருதப்படுகின்றது.

இங்கிலாந்து சார்பாக கடந்த போட்டியில் விளையாடிய மத்தியூ பொட்ஸை அறிமுக இடதுகை இளம் வேகப்பந்துவீச்சாளர் ஜொஷ் ஹல் பிரதியிடுகிறார்.




29ஆவது தங்கங்களின் சமர்:

# வென்றது மட்டு. சிவானந்தா







திருகோணமலை ராமகிருஷ்ண மிஷன் ஸ்ரீகோணேஸ்வரா இந்து கல்லூரியுடனான 29ஆவது 50 ஓவர்கள் கொண்ட தங்கங்களின் சமர் போட்டியில் மட்டக்களப்பு கல்லடி சிவானந்தா தேசிய கல்லூரி வென்றது.

கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் சனிக்கிழமை(31) நடைபெற்ற இப்போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடிய அவ்வணி 32.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 72 ஓட்டங்களையே பெற்றது.

பதிலுக்கு 73 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சிவானந்தா, 13.4 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரராக சிவானந்தாவின் துவாதரன், சிறந்த பந்துவீச்சாளர் மற்றும் போட்டியின் நாயகனாக சிவானந்தாவின் அணித்தலைவர் நிருபன் ஆகியோர் தெரிவாகினர்.

முதலாவது இருபதுக்கு–20 சர்வதேசப் போட்டியில்

# ஸ்கொட்லாந்தை வீழ்த்திய அவுஸ்திரேலியா



ஸ்கொட்லாந்துக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரில், எடின்பேர்க்கில் புதன்கிழமை (04) நடைபெற்ற முதலாவது போட்டியில் அவுஸ்திரேலியா வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: அவுஸ்திரேலியா

ஸ்கொட்லாந்து: 154/9 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: ஜோர்ஜ் முன்சீ 28 (16), மத்தியூ குறொஸ் 27 (21), ரிச்சி பெரிங்டன் 23 (20), பிரன்டன் மக்முல்லன் 19 (15) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷோன் அபொட் 3/39 [4], ஸ்கேவியர் பார்ட்லெட் 2/23 [4], அடம் ஸாம்பா 2/33 [4], றைலி மெரெடித் 1/34 [4], கமரன் கிறீன் 1/12 [2], மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் 0/10 [2])

அவுஸ்திரேலியா: 156/3 (9.4 ஓவ.) (துடுப்பாட்டம்: ட்ரெவிஸ் ஹெட் 80 (25), மிற்செல் மார்ஷ் 39 (12), ஜொஷ் இங்லிஸ் ஆ.இ 27 (13) ஓட்டங்கள். பந்துவீச்சு: மார்க் வற் 2/13 [2], பிரண்டன் மக்முல்லன் 1/25 [2])

போட்டியின் நாயகன்: ட்ரெவிஸ் ஹெட்

இரண்டு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது போட்டியானது இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 06 செப்டெம்பர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.